(9)

# ஆர். ஜி. சேனநாயக்கா நேற்று காலமானர்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 314
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மார்கழி 8 ஷவ்வால் 23 புதன்கிழமை (23-12-70)




பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

அல்டன்
அலுமினியம் லூவர்ஸ்,
ஸ்லொட்டட்
ஆங்கிள் அயன்
மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

கொழும்பு, செவ்வாய்
இலங்கையின் பிரபல அரசியல்வாதியும் சிங்கள மகாஜனக்கட்சியின் தலைவருமான திரு. ஆர் ஜி சேனநாயக்க இன்று அதிகாலை 4-30 மணியளவில் காலமானார்.

நீண்டநாட்களாகவே நோய்வாய்ப்பட்டிருந்த திரு ஆர். ஜி. சேனநாயக்க உயிர்துறக்கும்போது அவருக்கு 59 வயது. காலஞ்சென்ற எப். ஆர் சேனநாயக்காவின் மூத்த புதல்வரான திரு. ஆர். ஜி. சேனநாயக்கா இலங்கை அரசியலில் தமிழ்மக்களுக்கெதிரான தீவிரக்கொள்கைகளைக் கடைப்பிடித்ததின் மூலம் பிரபல்யமாயிருந்தார்.

திரு சேனநாயக்கா சுகவீனமுற்றிருந்ததின் காரணமாக அண்மையில் லண்டனுக்கு சிகிச்சைக்காகசென்று திரும்பினார்.

1943 ம் ஆண்டு பல தொகுதியிலிருந்து சட்டசபைக்கு திரு ஆர் ஜி சேனநாயக்கா தெரித்தெடுக்கப்பட்டிருந்தார். 1947-ம் ஆண்டு சுதந்திரத்துக்குப்பின் பாதுகாத்த அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசியாக இவர் நியமனம் பெற்றார்.

பின்னர் 1953 ம் ஆண்டு வர்த்தக அமைச்சராகஅவ பொறுப்பேற்றிருந்த காலத்தில் இலங்கை ரப்பரை ஏற்றுமதிசெய்யவும், சீன அரிசியை இறக்குமதிசெய்யவுமாக முதலாவது ஒப்பந்தம் ஒன்றினை இலங்கை கம்யூனிஸ்ட் சீனவுடன் செய்துகொள்ளகாரணமாய் இருந்தார்.

திரு. சேனநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி பின்னர் காலஞ்சென்ற திரு எஸ். டபிள்யூ ஆர். டி பண்டாரநாயக்காவின் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தார். 1968 ம் ஆண்டு திரு சேனநாயக்கா சிங்கள மகாஜனக் கட்சியை ஆரம்பித்தார், கடந்த தேர்தலில் இவரது கட்சி பல இடங்களில் போட்டியிட்டு தோல்வியடைந்தது.

திரு ஆர். ஜி சேனநாயக்காவின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

# இறக்குமதி லைசென்ஸ் இல்லாத பொருட்கள் பறிமுதலாகும்!

## இதற்கான சட்டம் விரைவில் வரும்

கோட்டை, செவ்வாய்

**இறக்குமதி லைசென்ஸ் இல்லாது நாட்டுக்கு கொண்டு வரப்படும் பொருட்களை அரசாங்கம் பறிமுதல் செய்யும்.**

இதற்கான மசோதா வொன்று விரைவில் ஆட்சி மன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

லைசென்ஸ் பெருமலேயே இறக்குமதிசெய்யப்பட்ட கைத்தொழில்களுக்கான யந்திரங்களும், மூலப் பொருட்களும் பெருந்தொகையாகக் கண்டுபிடிக்கபட்டதைத்தொடர்ந்தே இந் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கிறது.

தடை செய்யப்பட்ட பொருட்களும் நாட்டில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இப்படிப்பட்ட நிலையில் பொருட்களை வைத்திருப்பவர் சட்டப்பிரச்னைக்குள்ளா

ஹோமகம மக்கள் வங்கிக் கொள்ளை:

## இருவர்பற்றிய தகவலுக்கு ரூபா 30,000 வெகுமதி!

கோட்டை, செவ்

ஹோமகம வங்கிக் கொள்ளை சம்பந்தமாக தேடப்பட்டுவரும் இரு சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களைக் கொடுப்பவர்களுக்கும், கொள்ளையிடப்பட்ட மீதிப் பணத்தைக் கண்டுபிடிக்கத் தகவல் கொடுப்பவர்களுக்கும் மேலதிகமாக 10 ஆயிரம் ரூபாய் வெகுமதி வழங்கப்படும் என மக்கள் வங்கி இன்று அறிவித்தது.

இத்தகவல் சம்பந்தமாக ஏற்கெனவே 20 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்

ரூபா கொள்ளையடிக்கப்பட்டதும், இதுசம்பந்தமாகசிலர் கைதுசெய்யப்பட்டதும் ஒரு தொகைப்பணம் கண்டுபிடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

## தூதுவராக பெண் நியமனம்

கொழும்பு, செ உ.
யுகோஸ்லவியாவின் இலங்கைத் தூதுவராக ஒல்காஸ்ற்ஜீக் அம்மையார் நியமிக்கப் பட்டுள்ளார்.

## பதவி உயர்வு

கிளிநொச்சி, செவ்.
கிளிநொச்சிப் பட்டின சபையில் கடமையாற்றிய திரு கே. கார்த்திகேசு அடுத்தவருட ஆரம்பத்திலிருந்து ஊர்காவற்றுறை பட்டினசபை செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்கிறார்,

ஜனவரி 8 முதல்

## பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம்

கொழும்பு, செவ்.
கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் வருகிற ஜனவரி மாதம் 8-ந் திகதி முதல் "பண்டாரநாயக்கா

சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்காவே விரிவாக அமைத்தார்.

6 கோடியே 60 லட்சம்

# சுவீப்முடிவுகள்

கொழும்பு, புதன்
நேற்று இழுக்கப்பட்ட 329-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

1-வது பரிசு
04 W 0367 ரூ. 67,030

2-வது பரிசு
22 N 0700 ரூ. 26,812

3-வது பரிசு
26 O 0312 ரூ. 6,703

தலா ரூபா 335-15 சதம் பெறும் 10) டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| | | 02 N 0327 | 11 S 0786 |
| | | 08 A 0120 | 30 J 0481 |
| | | 17 Y 0296 | 21 D 0830 |
| | | 28 B 0606 | 10 o 0516 |
| | | 05 X 0177 | 24 J 0352 |
| | | 03 W 0443 | 26 P 0374 |
| | | 23 M 0911 | 32 C 0075 |
| | | 02 N 0235 | 16 W 0780 |
| | | 16 L 0930 | 02 R 0368 |
| | | 12 G 0328 | 02 C 0058 |
| | | 12 B 0162 | 04 E 0628 |
| | | 21 T 0780 | 06 C 0044 |
| | | 22 C 0774 | 05 U 0861 |
| | | 20 Y 0140 | 06 M 0843 |
| 20 F 0171 | 14 U 0998 | 22 Y 0685 | 22 B 0789 |
| 03 H 0697 | 05 P 0191 | 19 U 0778 | 09 S 0606 |
| 07 W 0991 | 22 F 0207 | 32 J 0397 | 07 H 0243 |
| 12 B 0654 | 15 M 0357 | 22 J 0815 | 25 L 0151 |
| 23 V 0506 | 08 W 0268 | 13 V 0856 | 30 V 0582 |
| 24 Y 0802 | 26 Q 0854 | 08 K 0542 | 25 Y 0797 |
| 09 G 0568 | 30 N 0281 | 04 N 0603 | 21 K 0093 |
| 28 C 0468 | 21 o 0654 | 13 A 0136 | 12 P 0583 |
| 27 B 0142 | 06 G 0557 | 12 o 0336 | 15 P 0747 |
| 24 S 0512 | 03 L 0127 | 30 V 0449 | 02 L 0721 |
| 15 E 0865 | 04 K 0641 | 01 C 0908 | 11 J 0129 |
| 19 M 0376 | 24 S 0247 | 03 H 0238 | 10 Q 0235 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கான மசோதா ளொன்று விரைவில் ஆட்சி மன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது.

லைசென்ஸ் பெருமலையே இறக்குமதிசெய்ய ப்பட்ட கைத்தொழில் களுக்கான

யத்திருக்கும், மூலப் பொருட்களும் பெருந் தொகையாக கண்டுபிடிக் கப்பட்டதைத்தொடர்ந்தே இந் நடவடி க்கையை அர சாங்கம் மேற்கொள்ளவிருக் கிறது.

தடை செய்யப்பட்ட பொருட்களும் நாட்டில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இப்படிப்பட்ட நிலையில் பொருட்களை வைத்திருப்பவர் சட்டப்பிரச்னைக்குள்ளாவர்.

மக்கள் வங்கி இன்று அறிவித்தது.

இத்தகவல் சம்பந்தமாக ஏற்கனவே 20 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது தற்போது மேலும் பத்தாயிரம் சன்மானம் வழங்கவிருப்பதாக மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

தலைமறைவாகத் திரியும் சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களை குற்றஇயல் புலன் விசாரணைப் பகுதியினரிடம் அறிவிக்கலாம் எனப் பொலிசார் தெரிவித்தனர். தகவல்கள் அந்தரங்கமாக வைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது

ஹோமகம மக்கள் வங்கியில் 5 லட்சத்து 4 ஆயிரம்

யாழ். நகரில் இழுக்கும்

தேசிய சுவீப் சீட்டிழுப்பு

# லட்சம் ரூபாய் அதிர்ஷ்டம் நிதி அமைச்சர் கையில்!

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணத்தில் அடுத்த மாதம் 24-ம் தேதி நடை பெறவிருக்கும் தேசிய சீட் டிழுப்புவிழாவில் நிதிஅமைச் சர் டாக்டர் என் எம் பெரேரா கலந்துகொவார்

யாழ். வீரசிங்கம் மண்ட பத்தில் நடக்கும் சீட்டிழுப்பு விழாவில் முதலாவது பரிசுக் குரிய டிக்கட் இலக்கங்களை நிதி அமைச்சர் என். எம் பெரேரா எடுப்பார் 2-வது பரிசுக்குரிய டிக்கட் இலக் கங்களை யாழ் மேயர் திரு ரி எஸ் துரைராஜா எடுப் பார்.

யாழ்ப்பாணம் நகரமண்ட பத்தில் ஜனவரி 25-ம் தேதி நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா வரவு செலவுத் திட்டம் பற்றி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

ஜனவரி 26-ம்திகதியாழ்ப் பாணத்தில் நடைபெற விருக்கும் சமசமாஜகட்சி வாலிபர் இயக்க மகாநாட் டில் நிதி அமைச்சர் டாக் டர்என். எம் பெரேரா ஆட்சி மன்ற உறுப்பினர்களான திருமதி விவியன்குணவர்த் தன, திரு: நாணயக்காரா, திரு. பெர்னாட்சொய்சா ஆகியோரும் கலந்துகொள் வார்கள்.

## கோரிக்கை

பருத்தித்துறை, செவ். பருத்தி துறையில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வரும் ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமத்திற்கென நிரந் தரமான நிலத்தில் ஒரு கட்டிடம்அமைக்கும்முயற்சி யில் மேற்படி நிலையப் பொதுக் காரியதரிசி பிர. இரத்தினசபாபதி ஈடுபட்டு வருகிறார். மனித குலத்தின் விமோசனத்திற்காக "ஜீவ சேவையே சிவபூஜை" என்ற குறிக்கோளுடன் இயங்கி வரும் இந்நிலையத்திற்கென ஒரு நிரந்தரமண்டபமும் கட் டப்படவிருப்ப தாக அறியத் தெரிகிறது. இந்நோக்கத் துடன் ஒரு துண்டுப்பிரசுர மும் வெளியிடப்பட்டுள் ளது;


## முக்கிய அறிவித்தல்

# ஆனந்தா திருக்குறட் கலண்டர்கள்

தற்சமயம் எங்களிடம் கைவசம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆயினும்,

ஏற்கெனவே எங்களிடம் கட்டளை (ஓடர்) தந்து பெற்றுக்கொண்ட கலண்டர் விற்பனையாளர்களி டம் இன்னமும் சொற்ப ஆனந்தா திருக்குறட் கலண்டர்கள் விற்பனைக்காக இருக்கக் கூடும்.

அன்பர்கள் தாமதியாது உங்கள் பக்கத்திலுள்ள கலண்டர் விற்பனையாளரிடம் சென்று "ஆனந்தா திருக்குறட் கலண்டர்" என்று கேட்டு உடனே வாங்கிக் கொள்ளுமாறு ஆலோசனை கூறுகிறோம்.

ஆதரவுக்கு நன்றி செலுத்தும்,

**ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.**

(ஆனந்தா திருக்குறட் கலண்டர் தயாரிப்பாளர்கள்)


## பரிசுத் தொகை கோரப்படவில்லையாம்

யாழ்ப்பாணம், புதன் யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் விற்பனை செய்த தேசிய லொத்தர்சபையின் 326-வது சுவீப் சீட்டிழுப் பில் ஆறுதல் பரிசு பெற்ற நான்கு டிக்கட்டுகளுக்கான பரிசுத்தொகை இன்னும் கோரப்படவில்லை என்று அறிவிக்கின்றனர்.

# இன்று நடைபெறும் யாழ். மாநகரசபைக் கூட்டம்

## இராஜசூரியர் வருவார் கூட்டமும் நடைபெறும்

யாழ்ப்பாணம், புதன் இன்று மாலை நடைபெற விருக்கும் யாழ் மாநகர சபைக் கூட்டத்திற்குச் செல்லுமாறு தமது வழக்கறிஞர் ஆலோசனை கூறியிருப்பதால் நிச்சயம் கூட்டத்திற்குச் செல்ல விருப்பதாக திரு ஏ ஜி இராஜசூரியர் தெரிவித் தார்.

இம்மாதம் 16-ந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் திரு ஏ ஜி இராஜசூரியர் கலந்துகொண்டு சபையை விட்டு வெளியேற மறுத்த தால் மேயர் கூட்டத்தை மறு அறிவித்தல் வரை ஒத்தி வைத்தார் ஒத்தி வைக்கப்பட்ட கூட்டம் இன்று மாலை நடைபெற விருக்கிறது

இன்று கூட்டம் நிச்சயம் நடைபெறுமென்றும், பின் போடப்படாதென்றும் மேயர் திரு ரிஎஸ் துரை ராஜா தெரிவித்தார்.

திரு இராஜசூரியர் புலோப்பளை கிராமசபைத் தலைவராகவும், யாழ்ப் பாண மாநகரசபை உறுப் பினராகவும் ஒரே சமயத் தில் இருந்ததால் யாழ். மாநகரசபை உறுப்பினராக தெரிவானது செல்லாதென சுப்பிறீம்கோர்ட்டில் தாக்க லான தேர்தல் ஆட்சேப வழக்கில் அவரது மாநகர சபை உறுப்பினர் பதவி செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கப் பட்டிருந்தது.

இத்தீர்ப்பின் காரணமாக திரு இராஜசூரியரை கடந்த கூட்டத்தின்போதுசபையில் இருக்க மேயர் அனுமதிக்க வில்லை. இத்தீர்ப்பை எதிர்த்து தான் அப்பீல் செய்துள்ளதால் சபையில் இருக்க உரிமையுண்டென்று திரு இராஜசூரியர் கூறி னார் இதைத் தொடர்ந்து கடந்த கூட்டம் ஒத்திவைக் கப்பட்டது.

கொடிகாமம்

# இராசு கொலை வழக்கு: இன்று தீர்ப்பு

மட்டுவில், செவ். கொடிகாமம் இராசு கொலை வழக்குதீர்ப்பு இன்று வழங்கப்படவிருக்கிறது. நேற்று எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர்களின் தொகுப்புரை நடைபெற் றது.

இவ்வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே' விக்னராசா முன்னிலையில் நேற்றும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது

இவ்வழக்கில், கொடிகா மத்தில் ஆறுமுகம் கனகரத் தினம் அல்லது இராசு என் பவரை கொலைசெய்ததாக சின்னப்பொடி கந்தையா எஸ். வல்லிபுரம், சி. சற் குரு ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் அட்வ கேட் எஸ். தம்பித்துரை, அட்வகேட் ஏ. அமிர்தலிங் கம், ஆகியோர் புறக்டர் என். அருணாசலத்தின் உதவி யுடன் ஆஜரானார்கள்,

எதிரிகள் சார்பில் ஆஜ ரான அட்வகேட் தம்பித் துரை தொகுப்புரை நிகழ்த் தினார் இதைத்தொடர்ந்து அட்வகேட் ஏ. அமிர்தலிங் கம் தொகுப்புரை நிகழ்த்தி னார்.

மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்குவதை இன்று காலை வரை ஒத்திவைத்தார்.

கொழும்பு, செவ். கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் வருகிற ஜன வரி மாதம் 8-ந் திகதி முதல் "பண்டாரநாயக்கா சர்வ தேசவிமான நிலையம்" என்ற பெயருடன் இயங்கும்

தென்கிழக்காசியாவில் உள்ள சிறந்த விமானத் தளங்களில் ஒன்றாகிய இந்த விமான நிலையத்தை கொழும் புத் திட்டத்தின்கீழ் கனடா வின் உதவியுடன் காலஞ் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர் டி. பண்டார நாயக்காவே விரிவாக அமைத்தார்.

6 கோடியே 60 லட்சம் ரூபா செலவில்கட்டப்பட்ட இந்த விமான நிலையத்திற்கு 3 கோடியே 70 லட்சம் ரூபாவை கனடா இலங்கை க்குக் கொடுத்துதவியது. 2 கோடி 90 லட்சம்ரூபாவை இலங்கை செலவு செய்தது.

# நுரலை எம். பி. பதவி இழந்தார்

கொழும்பு, செவ்வாய் நுவரெலியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. காமினி திஸாநாயக்கதமதுபதவியை இழந்தார். இவர் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த வர்.

இவர் நுவரெலியா தொகுதியின் ஆட்சிமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சே பித்து தாக்கல்செய்யப் பட்டிருந்த மனுதேர் தல் நீதியரசர்ஓ. எல். டி, கிரெட்ஸர் ஏற்றுக்கொண்டு அவரது தெரிவு செல்லுபடி யாகாதென தீர்ப்பளித்தார் இந்தமனுவில் 4-வது பிரதி வாதியான ஹெட்டிமுல்லே வஜ்ஜிரபுத்திதேரோ சிறி லங்கா சுதந்திரக் கட்சிவேட் பாளரின் ஒழுக்கம் பற்றி தேர்தல் காலத்தில் உண் மையற்ற தகவல்களை வெளி யிட்டிருக்கிறார் என்று நீதி யரசர் குறிப்பிட்டார்.

மறு அபேட்சகரான வில் லியம் பெர்னன்டோவின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி உண்மைக்குப் புறம் பான தகவல்களை ஹெட்டி முல்லே வஜ்ஜிர புத்தி தேரோ பொதுக் கூட்டத் தில் பேசியிருக்கிறார். அவர் இதை மறுத்தாலும் கூட, சாட்சியங்களை நம்பக் கூடிய தாகவிருக்கிறது. இவர் காமினி திசநாயக்காவின் ஏஜெண்டு என்பதையும் நிரூபிக்க சாட்சியமுண்டு. சம்பந்தப்பட்ட கூட்டத்தில் தேரோவைப் பேச காமினி திசநாயக்காவலிய அழைத் திருக்கிறார். கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தவரை யும் நிறுத்தி தேரோ பேசு வதற்கு திரு. திசநாயக்கா இடமளித்திருக்கிறார். பேசி முடிந்த பின்னரும் தேரோவை கார் வரை அழைத்துச் சென்றுள்ளார். தேரோ பேசியது பற்றி யும் திரு. திஸநாயக்கா மறு த்துச் சொல்லவில்லை என்று நீதியரசர் தமது தீர்ப்பின் போது கூறினர்.

இந்த ஆட்சேபனை மனு நுவரெலியாவைச் சேர்ந்த எச். எம். அபேயசிங்கா என் பவரால் தாக்கல் செய்யப் பட்டிருந்தது. வாக்காளர் களுக்கு விருந்து வைத்து தேர்தல் ஒழுங்குகளை மீறிய தாகவும் வேறுபல காரணங் களையும் அடிப்படையாகக் கொண்டு இவ்வாட்சேபனை மனு தாக்கல் செய்யப்பட் டிருந்தது. (சி பி ஏ)

## நீதிராசா தலைமையில் செனட்சபை

கொழும்பு, செவ் செனட்சபையில் இன்று வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் நடை பெற்றுக் கொண்டிருந்த போது இரவு 7 மணியள வில்சபைத் தலைவர் திரு. இரத்தினயக்கா வெளியே சென்றார், அதன் பின்னர் செனட்டர் நீதிராசா தலைமையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

திரு. நீதிராசா தலைமை வகிக்கச் சென்ற போது திரு. ரெஜிபெரேரா(ஸ்ரீ ல சுகட்சி)பெயரே நீதிராசக என்றிருப்பதால்,அவர் நீதி யாகச் சபையை நடத்து வார்' என்றுபலத்த கர கோஷத்தின்மத்தியில்கூறி னார்.

| | | | |
|---|---|---|---|
| 09 G 0568 | 30 N 0281 | 04 N 0603 | 21 K 0093 |
| 28 C 0468 | 21 o 0654 | 13 A 0136 | 12 P 0583 |
| 27 E 0142 | 06 G 0557 | 12 o 0336 | 15 P 0747 |
| 24 S 0512 | 03 L 0127 | 30 V 0449 | 02 L 0721 |
| 15 E 0865 | 04 K 0641 | 01 C 0908 | 11 J 0129 |
| 19 M 0376 | 24 S 0247 | 03 H 0238 | 10 Q 0235 |
| 06 U 0768 | 12 Z 0082 | 08 R 0352 | 24 Q 0248 |
| 03 H 0130 | 26 W 0369 | 13 F 0148 | 11 B 0540 |
| 01 L 0088 | 21 Z 0778 | 30 T 0859 | 23 D 0803 |
| 25 Q 0886 | 28 R 0504 | 17 W 0736 | 04 W 0011 |
| 05 A 0292 | 04 J 0680 | 23 G 0470 | |
| 10 V 0514 | 31 C 0750 | இவை உறுதிப்படுத்தப் | |
| 16 L 0514 | 27 O 0371 | படவேண்டியவை) | |

பழைய ரூபாய் நோட்டுக்கள்

# தரகர்மூலம் மாற்றியவர்கள் பற்றிய தகவலுக்கு சன்மானம்

கோட்டை, செவ். பழைய 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்கள் செல்லு படியாகாதென அறிவிக்கப் பட்டபின்னர் வங்கிகளில் 1000 ரூபாவுக்குமேல் மாற் றியவர்களின் தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு சன் மானம் வழங்கப்படும்என்று நேற்று அரசாங்கம் அறிவித் தது.

இந்த நோட்டுகள் செல்லு படியாகாதென்று பிரகட னப் படுத்தப்பட்ட மறு தினமே பல பதுக்கல்காரர் கள் தரகர்மூலம் பல ஆயி ரம் ரூபா நோட்டுக்களை வங்கிகளில் மாற்றியுள்ள தாக தகவல் கிடைத்திருப் பதாகவும், இவ்விதம் பண த்தை மாற்றியவர்கள் பற் றிய விபரங்களைத் தெரியப் படுத்தியவர்களுக்கு வெகு மதி வழங்கப்படும் என்றும் நிதி அமைச்சு வட்டாரம் நேற்று அறிவித்தது.

பணத்தை மாற்றிக் கொ டுத்தவர்களே இத்தகவல் களைத் தரலாம் என்றும், அவர்கள் மீது இது சம்பந் தமாக அரசாங்கம் நடவடி க்கை எடுக்காது என்றும் தெரிவிக்கப்பட்டதுடன், தக வல் தருபவர்களின் விபரங் கள் அந்தரங்கமாக வைக் கப்படும் என்றும் அறிவிக் கப்பட்டது.

# கூட்டுறவு வருடாந்தமாநாடு; அமைச்சர்கள் கலந்து கொள்வர்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதி ஐக்கிய மேற் பார்வைச் சபையின் வரு டாந்த கூட்டுறவு மகாநாடு இம்மாதம் 26ம் தேதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இம் மகாநாட்டில் வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச் சர் திரு ரி பி இலங்கரத்ன, தபால் அமைச்சர் திரு செல் லையா குமாரசூரியர் ஆகி யோர் கலந்துகொள்வரர் கள்.

வடபகுதி ஐக்கிய மேற் பார்வைச் சபைத் தலைவர் திரு இராசரத்தினம் தலை மையில் 26ம் தேதி காலை மகாநாடு ஆரம்பமாகும் காலை 9-30 மணி கொடி வணக்கம் திரு வே சுப் பையா (தலைவர் சரசாலை மட்டுவில் பலநோக்கு கூட் டுறவு சங்கம்) 9-40 கடவுள் வணக்கம், 9-45 கூட்டுறவுக் கீதம், 9-50 வரவேற்புரை தலைவர், 10-05 பேருரை வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு ரி பி இலங்கரத்ன

காலை 11-00 மணி சொற் பொழிவுகள் தபால் அமைச் சர் திரு செ குமாரசூரியர், இலங்கை கூட்டுறவு சம்மே ளன தலைவர் திரு எல் எம் பி டி சில்வா கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு ஆர் ஜி ஜி ஒ குணசேகரா. கூட் டுறவு மொத்த வியாபார ஸ்தாபனத் தலைவர் திரு ஆர் ஐ ஒபயசேகரா நண்பகல் 12 00 பிரேரணைகள் 12-30 நன்றியுரை

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம் ரி டபிள்யு அபயசேகரா தலைமையில் பிற்பகல் நிகழ்ச்சிகள் ஆரம் பமாகும் 2-00 கடவுள் வண க்கம் 2-05 வரவேற்புரை திரு இ இராசரத்தினம், 2-15 தலைவர் முன்னுரை, 2-45 பிரேரணைகள் 4-30நன் றியுரை மாலை 6-00 கலைநிக ழ்ச்சிகளும் பரிசளிப்பு விழா வும் மந்திரி ரி பி இலங்கரத் தினவினதும் பாரியாரினதுப ஆதரவில் நடைபெறும் திரு மதி இலங்கரத்தின பரிசில் களை வழங்குவார்

27ம் தேதி காலை வட பகுதி ஐக்கிய மேற்பார்வை சபையின்வருடாந்தபொதுக் கூட்டம் நடைபெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

மாடு, ஆடு முதலிய மிருகங்கள் விற்கலாம், வாங்கலாம். போயா முன்தினம், போயா விடுமுறை நாட்களில். ப. நாகராசா, ஆலாத்திவெளித் தோட்டம், அரசினர் உணவுப் பண்டகசாலைக்கு அண்மையில், நாவற்குளி. 2589

### விற்பனைக்கு

நல்லூர் செட்டித் தெருவில் மூன்று பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க லான்ட் றேட்ஸ் (Land Trades), 35, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2566

13 அடி நீளம் 7 1/2 அடி உயரமுள்ள தனி முதிரை அலுமாரியும் வேறு சோக்கேஸ், பிரு(?)கிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும், சு. வையாபுரி, மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி. 2590

ஏறக்குறைய நாலு பரப்பு நிலமும் கல்வீடும் கிணறும் கொண்ட காணி, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கும், பிள்ளையார் கோயிலுக்கும் இடையில் பிரதான வீதியில். கேள்விகள் 26-2-71 வரை பதிவுக் கடிதம் மூலம் ச. கார்த்திகேசு, விற்பனை அபிவிருத்தி திணைக்களம், தகரத்தடைக்கும் தொழிற்சாலை, நாரம்பிட்டி கொழும்பு 5 என முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும். 2592

## "கன்னி பெற்ற கடவுள்"

யாழ்ப்பாணம், புதன்

திருமறைக் கலாமன்றத்தாரின் தயாரிப்பான 'கன்னிபெற்ற கடவுள்' என்ற நாடகம் இம்மாதம் 28-ந் திகதியன்று பிற்பகல் யாழ். நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## திருமண நன்றி நவிலல்

13-12-70ல் கொழும்பில் நடைபெற்ற எமது புத்திரி தர்மாம்பாள் - செல்வன் கனகநாயகம் திருமணத்தின்போது நேரில் வந்து ஆசீர்வதித்தும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியும் அன்பளிப்புகள் செய்தும் எம்மையும் மணமக்களையும் கௌரவித்த உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எங்கள் உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறோம் திரு. திருமதி இளையதம்பி, வட்டுக்கோட்டை மேற்கு. 2591

### தேவை

நடிக நடிகையர் தேவை. நவரச நாடகாலயம், நாடக, திரைப்பட தயாரிப்பாளர் செயலாளர் 67, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2594

### விற்பனைக்கு

வவனியா பட்டினத்தில் பல வசதிகளுமுள்ள அழகான வீடும் பெரிய வளவும் ச. ஸ்ரீநிவாசன், உடுவில், சுன்னாகம். 2595

கிளிநொச்சி, செவ்.

"வெளிநாடுகளுக்கு சமய யாத்திரை செய்வதில் கட்டுப்பாடு விதிப்பது ஜனநாயகத்துக்கு அப்பாற்பட்ட காரியமாகும். குறிப்பாக இப்புதிய திட்டத்தை அரசாங்கம் அமுலுக்குக் கொண்டுவருவதால் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும்தான் தொல்லையுறுகின்றனர். மதசுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் இத்திட்டத்தை உடனடியாகக் கைவிடவும்"

மேற்கண்டவாறு கிளிநொச்சிப் பட்டினசபைத் தலைவர் திரு. ச. சு. முருகேசு பிரதம மந்திரிக்கு அனுப்பியுள்ள அவசரத் தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஒத்து மாறுதல்

பேராதனைப் பல்கலைக் கழக முதல் ஆண்டுக் கலை மாணவர் ஒருவர் கொழும்பு பல்கலைக் கழக மாணவருடன் ஒத்து மாறுதல் (Mutual-Exchange) செய்ய விரும்புகிறார். கடிதமூலமோ, நேரிலோ உடன் தொடர்பு கொள்க.

பொ. பாலசிங்கம்,
12, ஹம்டன் ஒழுங்கை,
கொழும்பு-6
2599

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 23—12—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ. அல்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 7-45 சித்திரம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீ. அல்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அல்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-10 பொலிஸ் நிகழ்ச்சி, 6-15 வயலின், 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 கண்ணகி காவியம், 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர் விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா —அசோகன் நடித்த
மாட்டுக்கார வேலன்

மனோஹரா – யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்
என். டி. ராமராவ், கே. ஆர். விஜயா, ராஜஸ்ரீ நடித்த
லக்ஷ்மி கடாட்ஷம்

வெலிங்டன் சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
பி. யு. சின்னப்பா-சரோஜினி
கிருஷ்ணன் - மதுரம்
நடித்த
ஆரியமாலா
(புதிய கொப்பி)

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
வொழி— கே. ஆர். விஜயா


## கொடிகாமம் பஸ் சாரதி கொலை வழக்கு

# 'சம்பவம் நடந்த இடத்திற்கு என்னை 3-ம் எதிரி கூட்டிச்சென்றார்'

### சார்ஜன் தாமோதரம் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

'நான் 3ம் எதிரியான பெருமாள் இராமலிங்கத்தை இவ்வருடம் ஏப்ரல் 2-ம் தேதி கைதுசெய்தேன். 2ம் எதிரியான தம்பிமுத்து நடராசரத்தினத்தை அச்சுவேலி, கொடிகாமம், புத்தூர் ஆகிய இடங்களில் தேடினேன். நான் 3ம் எதிரியின் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அவர் என்னை கொடிகாமத்தில் சம்பவம் நடந்த இடத்திற்கு கூட்டிச் சென்றார்.'

கொடிகாமம் பஸ் சாரதி கொலை வழக்கில் சாட்சியமளித்த சார்ஜண்ட் ரி தாமோதரம் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே விக்னராசா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் இவ்வருடம் மார்ச் மாதம் 21ம் தேதி கொடிகாமம் பஸ் நிலையத்தில் பஸ் சாரதி சின்னப்பொடி வேலுவைக் கொலைசெய்ததாக, தம்பிமுத்து கணேசமூர்த்தி, தம்பிமுத்து நடராசரத்தினம், பெருமாள் இராமலிங்கம் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் ஜே ஏ. பி. செரிபிம், புறக்டர் எஸ் பி மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். சாவகச்சேரி பொலிஸ் நிலைய அதிபர் திரு என். கதிர்காமநாதன் வழக்கை நடத்தினார்.

சார்ஜண்ட் தாமோதரம் மேலும் கூறியதாவது:

கொடிகாமம் பஸ் சாரதி கொலை சம்பந்தமாக புலன் விசாரணை செய்யுமாறு வடபகுதி பொலிஸ் அதிபர் தெரிவித்தார். புலன்விசாரணை நடத்தியபோது கிடைத்த தகவலின்படி சிலரின் வாக்குமூலங்களை பதிவுசெய்தேன்

இன்னையா சின்னத்தம்பி, சின்னத்தம்பி குணரத்தினம், பெரியதம்பி இரத்தினம், சின்னத்தம்பி இரத்தினம், [illegible] பெரியதம்பி துரைசிங்கம், [illegible]

வழ: சம்பவம் நடந்த போது நீர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றவில்லை?- ஆம்.

வழ: சாவகச்சேரி பொலிஸார் இக்கொலை பற்றி விசாரணை செய்தனர்?- ஆம்.

வழ: இன்ஸ்பெக்டர் துரைசிங்கம் அதற்குப் பொறுப்பாக இருந்தார்?- ஆம்.

வழ: இக்கொலை பற்றி புலன்விசாரணைசெய்ய நீர் தான் தகுந்த ஆள் என பொலிஸ் அதிபர் நினைத்தார்?- எனக்குத் தெரியாது.

வழ: நீர் பல சாட்சிகளை கண்டுபிடித்தீர்?- ஆம்.

வழ: அந்தச் சாட்சிகள் கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டபோது அவர்கள் மறுத்துக்கூறியது உமக்குத் தெரியும்?- எனக்குத் தெரியாது.

வழ: அவர்கள் மறுத்தது தெரியாது?- அவர்கள் சாட்சிக்கூண்டில் என்ன சொன்னார்கள் என்று எனக்குத் தெரியாது.

வழ: இறந்தவரின் மகனை வேலு குணரத்தினத்தின் வாக்குமூலத்தைப் பதிவு செய்தீர்? ஆம்.

வழ: பொலிஸ் நிலையத்திற்கு எத்தனை பேரைக் கொண்டுசென்றீர்? 3 ம் எதிரியை மட்டும் கைது செய்தேன்.

வழ: 1ம், 2ம் எதிரிகளின் தகப்பனரை பொலிஸ் நிலையத்திற்கு நீர் கொண்டு செல்லவில்லையா? விசாரணைக்காக கொண்டுசென்றேன்.

வழ: அதேபோல மற்றவர்களையும் பொலிஸ்நிலையத்திற்கு கொண்டு சென்றீர்? விசாரணைக்காக.

வழ: சாவகச்சேரி, பளை, அச்சுவேலி, பொலிஸ் நிலையங்களுக்கு அவர்களை கொண்டு சென்றீர்? எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம்.

வழ: அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றீர்? இல்லை.

வழ: எதற்காக அவர்களை பளை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றீர்? சில தகவல்களுக்காக.

வழ: அப்படியல்ல, பளை [illegible]

வழ: அரைக்கை சேட் அணிந்திருந்தார். வெள்ளை சேட்,

வழ; அரைக்கை சேட்? ஞாபகமில்லை.

வழ: சேட் பின்பக்கம் கிழிந்திருந்தது? ஆம்

வழ: கிழிந்த சேட்டினைப் பார்த்தீர்? -ஆம்

வழ: துவக்கு சூட்டை கண்டீரா? சேட் பின்பக்கம் இரு துவாரங்கள் காணப்பட்டன. ஒரு துவாரம் வலது தோள்மூட்டில் இருந்தது.

வழ: மற்ற துவக்கு சூடு தோள்மூட்டில் ஒன்று வலது தோளில் இருந்தது.

வழ: அவ்விடத்தைவிட்டு எத்தனை மணிக்கு சென்றீர்? - காலை 6 மணிக்கு,

வழ: அந்த நேரம் வரை ஒருவராவது வந்து வாக்குமூலமளிக்கவில்லையா? சின்னப்பொடி கந்தையாவைத் தவிர வேறு எவரும் வந்து வாக்குமூலமளிக்கவில்லை.

வழ: எவரும் கண்கண்ட சாட்சியென வந்து கூறவில்லை? - இல்லை.

மேல் விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

# ஓய்வு பெறும் ஆசிரியர்கள்

### ஆ. ம. செல்லத்துரை

ஆண்டுகள் பலவாக ஆசிரியப்பணி தாங்கி ஆசான்என்பதற்கே இலக்கணம் எடுத்துரைத்த திரு. ஆ. ம. செல்லத்துரை ஆசிரியர் தேவரையாளி இந்துக் கல்லூரியின் கனிஷ்ட அதிபர் பதவியிலிருந்தும் இவ்வாண்டுடன் இளைப்பாறுவது கல்லூரிக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துவதாகும்.

சிறுரைச்சினக்காது சிரிக்கவைத்துச் சிந்தனையூட்டி கல்வி புகட்டுவதில் கைதேர்ந்தவராய் விளங்கிய இவரை 'ஆவன்னா மானா' வென்றால் அறியாதார் யாருமில்லை. பெற்றோரின் அளவற்ற அன்புக்குப் பாத்திரமானவர். மாணவனின் மதிப்புறு வாழ்க்கை பற்றி எண்ணுகின்ற ஆசிரியர்கள் ஆயிரத்தில் ஒருவராய் விளங்குகின்றார் திரு. ஆ. ம. செ. கல்லூரியின் உயர்ச்சிக்காக அயராது உழைக்கும் அதிபருடன் தானும் சமமாக உழைத்து கல்லூரியை இன்றையநிலைக்குக் கொணர வைத்த பெருமை அவரைச் சாரும்.

ஆசிரியப்பணியில் மட்டுமன்றி சமூக வளர்ச்சி, சமூக முற்போக்கு ஆகியனவற்றிற்காகவும் தன்னை அர்ப்பணித் [illegible] நடையும் தாயகதராடையும் துணிந்தபேச்சும் இவற்றிற்கெல்லாம் மெருகூட்டினாற்போல் விளங்குகின்றன. அவர் ஒரு 'கொல்லான் புலாலை மறுத்தான்' எனவே, அவரின் உடல் தூய்மையானது; உள்ளம் தூய்மையானது.

-அல்வாய் சி. திரவியம்

0 0 0

### சங்கீதபூஷணம் சி. விநாசித்தம்பி

மட்டுவில், செவ்.

'அன்று தென்நாட்டிலே தோன்றிய நாயன்மார்களும் ஆழ்வார்களும். ராகதாள பாவ நயத்துடன் பதிகங்களும் பாசுரங்களும் கருநாடக இசை மூலம் பாடி இறைவனுடன் இரண்டறக்கலக்கும் பேரின்பத்தை அனுபவிப்பதற்குரிய சாதனமாக கருநாடக சங்கீத கலையைக்கையாண்டு அதன் மூலம் ஆண்டவன் திருவடியை அடைந்தார்கள் என்ற உண்மையை இன்று நமது மத்தியிலே செயல்மூலம்எடுத்துக்காட்டி இறைவன் நாமத்தின் புகழ் பாடி, நல்ல செயல்க. செய்துவரும், சங்கீதபூஷணம் திரு சி விநாசித்தம்பியின் சேவையை நாம் பாராட்டாமலிருக்கமுடியாது.

## இன்றைய பலன்

மார்கழி மாதம் 8-ம் திகதி

[23-12-70]

மேஷம்- ஆணவப் போக்கு அடிசறுக்கவைக்கும். பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம்.

ரிஷபம்- புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். பொதுமக்களின் மதிப்பு கிட்டும். சிறப்பானதினம்.

மிதுனம்- உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் கிடைக்கும் உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள். உவகை சேரும்.

கடகம்- அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் போற்றப்படுவார்கள். சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பம் ஏற்படும்.

சிம்மம்- பொருள்முடை தென்படும். கடன்பட நேரிடும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போகலாம்.

கன்னி- சிறுவிடயங்களுக்குக் கூட குறைகேட்க நேரிடலாம். பெரியார் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றும்.

துலாம்- தகுதியில் முன்னேற்றமுண்டு. எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றி உண்டு. சிறப்பானதினம்.

விருச்சிகம்- தூரத்து செய்தியொன்று துயரத்தில் ஆழ்த்தும். பிணிக்கு இடம் கொடாது உடல்நலத்தைப் பேணவும்,

தனுசு- தாய்வழியால் பெருமைகள் சேரும் மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இன்று மகத்தான நாள்.

மகரம்- பணநெருக்கடி விலகுவதற்கான அறிகுறிகள் தென்படும். புத்திர வழியால் உதவியும் கிடைக்கும்.

கும்பம்- குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும், முடிந்தவரை மௌனம்சாதிக்கவும்.

மீனம்- இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும். கண்ணியமான தினம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை தபால் தந்தி என்சினியர் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளுஹரா — யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் போயா 4 காட்சிகள்
என். டி. ராமராவ், கே. ஆர். விஜயா, ராஜ்ஸ்ரீ
நடித்த

# லக்ஷ்மி கடாட்ஷம்

யாழ். வின்ஸர் திரையில் தினசரி 4 காட்சிகள்
ராஜன், லட்சுமி,
நிர்மலா, ரவிச்சந்திரன்
நடித்த

# ஏன்?

யாழ். வின்ஸர், றீகல்
தியேட்டர்களில்

## பரிசுத்த பாப்பரசர் 6-வது சின்னப்பரின் இலங்கை விஜயம்

30 நிமிடங்களுக்கு எல்லாக் காட்சிகளிலும்
காண்பிக்கப்படுகின்றது

கெப்பிட்டல் பிளாஸா மைலன்
திரைகளிலும்

## யாழ். வெலிங்டன்

திரையிலும்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30
இரவு 9-30, போயா நாட்கள்
காலை 10-30 மணி

ப. நீலகண்டனின் டைரக்ஷனில் உருவாகி
மக்கள் திலகம்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
வாணிஸ்ரீ





முத்துராமன், அசோகன், சோ,
ஓ. ஏ. கே. தேவர் மற்றும்பலர் நடித்த
சத்யா மூவிஸ்

# கண்ணன் என்காதலன்

தயாரிப்பு: ஆர். எம். வீரப்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்



(புதிய கொப்பி)

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
சிவாஜி — கே. ஆர். விஜயா
நடித்த

## தங்கை

REGAL
Jaffna
Daily 4-45, 7 9-45 p, m,
Poya days 4 shows
James Coburn
in
DUFFY
(Adults)


...ன்

இன்னையா சின்னத்தம்பி, சின்னத்தம்பி குணரத்தினம், பெரியதம்பி இரத்தினம், சின்னத்தம்பி இரத்தினம், சேத்துத்தம்பி அரங்கநாதன் கனகு ஆர். பரமநாதன் பெரியதம்பி துரைசிங்கம், சங்கரப்பிள்ளை கனகசிங்கம், சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரன், சிற்றம்பலம் நடராசா, க. நன்னித்தம்பி, எஸ். கந்தசாமி, மார்க்கண்டு, தம்பிமுத்து தங்கச்சியம்மா ஆகியோரின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தேன்

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வக்கேட் ஜே. ஏ. பி. செரிபிம் சாட்சியமளித்த சார்ஜண்ட் தாமோதரத்தை குறுக்குவிசாரணை செய்தார்.

...செல்லலாம்.

வழு: அச்சுவேலி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றீர்? இல்லை.

வழு: எதற்காக அவர்களை பளை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசென்றீர்? சில தகவல்களுக்காக.

வழு: அப்படியல்ல, பளையில் வசதியாக அடிக்கலாம் என்பதற்காக? நான் யாருக்கும் அடிக்கவில்லை.

வழு: சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பெரும் ஜனக்கூட்டம் இருந்ததால் வசதியில்லாமலிருந்ததா? இல்லை.

வழு: சங்கரப்பிள்ளை கனகசபையை எதற்காக கொண்டு சென்றீர்? விசாரணைக்காக.

வழு: சிதம்பரப்புள்ளை மகேசனை? பின் விசாரணைக்காக.

வழு: வாக்குமூலமளிக்கும்படி அவர்களை நீர் கட்டாயப்படுத்தினீரா? இல்லை நான் கட்டாயப்படுத்தவே இல்லை.

நேற்று முன்தினம் சாட்சியமளித்த வடபகுதி உதவி பொலிஸ் அதிபர் திரு வி பி. இராஜகுருவை எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே பி. செரிபிம் குறுக்குவிசாரணை செய்தார்.

வழு: சம்பவம் நடந்த இடத்திற்கு போனபோது இருட்டாக இருந்ததா? அப்போது காலை 3-45 மணி.

வழு: இருட்டாக இருந்ததா?—ஆம்.

வழு: சந்தியில் சம்பவம் நடந்தது? ஆம்.

வழு: சந்தி இருட்டாக இருந்தது? ஆம்.

வழு: சடலத்தை பரிசீத்தீர்? ஆம்.

...டன் தானும் சமமாக உழைத்து கல்லூரியை இன்றைய நிலைக்குக் கொணர வைத்த பெருமை அவரைச் சாரும்.

ஆசிரியப்பணியில் மட்டுமன்றி சமூக வளர்ச்சி, சமூக முற்போக்கு ஆகியனவற்றிற்காகவும் தன்னை அர்ப்பணித்தவர் இவர்.

வடமராட்சி இன்று சமூகக் கோட்பாடுகளை முறியடித்து ஓரளவு முன்னணியில் நிற்கிறது என்றால் அதற்கு முன்னோடிகளாய்த் திகழ்ந்தவர்களில் திரு ஆ. ம. செல்லத்துரை ஆசிரியரும் ஒருவர் என்பது மிகையல்ல. வடமராட்சியின் வரட்டு வேதாந்தமாம் சாதிச் சுரண்டலை தவிடு பொடியாக்க நினைத்து தமிழினத்தை ஒரு தரித்திர இனமாக்கிய சாதி வெறியை சாம்பராக்க நினைத்து, 'சாதி ஒழிக' சமத்துவம் வளர்க என்று முழங்கினார்; எழுதினார். இன்றைய சமத்துவம் இவையின் பிரதிபலிப்பேயாம். இன்று சமூக விடுதலைக்காக முன்னணியில் நின்றுபோராடும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கர்த்தாக்களில் ஒருவராயிருந்து ஊக்குவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தொண்டிற்காகவே வடமராட்சிச் சமூகசேவாசங்கத்தின் தலைவராகவும், மக்கள் முன்னேற்றமன்றத்தின் தலைவராகவும், அகில இலங்கை காந்தியசேவா சங்க உபதலைவராகவும் தொண்டாற்றி வருகின்றார்.

சைவநெறியினின்றும் வதறாத அவரது வாழ்க்கையும் நெற்றியிற் பூச்சும் நிதான...

...என்ற உண்மையை இன்று நமது மத்தியிலே செயல்மூலம் எடுத்துக்காட்டி, இறைவன் நாமத்தின் புகழ் பாடி, நல்ல செயல்களைச் செய்துவரும், சங்கீதபூஷணம் திரு சி விநாசித்தம்பியின் சேவையை நாம் பாராட்டாமலிருக்கமுடியாது.

இவ்வாறு மட்டுவில் சந்தர் மகாவித்தியாலயத்தில் 28 ஆண்டுகளாக இசை ஆசிரியராகப்பணிபுரிந்து ஓய்வு பெறும் கல்வயலூர் சைவ சிகாமணி சங்கீத பூஷணம் திரு. சி. விநாசித்தம்பிக்கு அளித்த பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமைதாங்கி உரைநிகழ்த்திய மகாவித்தியாலய அதிபர் திரு. பொன்னையா சபாரத்தினம் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

முன்னைநாள் அதிபர் வித்துவான் கே. நடராஜா, உபஅதிபர் திரு. எம். சங்கரம், திருமதி பவளம் முத்தையா உட்பட பல ஆசிரியர்களும், மாணவ, மாணவிகளும் உரை நிகழ்த்தினர்.

## கரபந்தாட்ட சுற்றுப் போட்டி

முசலி, செவ்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முசலிக் காரியாதிகாரி பிரிவில், 1971-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ந் திகதி நடைபெறவிருக்கும் சுதந்திரதின விழாவையொட்டி ஒரு கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி முசலிக் காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச்சபையினால் நடாத்தப்படவுள்ளது. இச் சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பதிகதி இம்மாதம் 28-ம் திகதி முடிவுறுகின்றது. இச் சுற்றுப்போட்டி 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ம் திகதி ஆரம்பமாகும். இதற்கான ஆயத்தங்களை முசலிக் காரியாதிகாரி திரு வைத்திலிங்கம் சொக்கலிங்கமும், முசலி காரியாதிகாரி விளையாட்டு உத்தியோகத்தர் திரு எம். அப்புக்குட்டி தியாகராசாவும் செய்துவருகிறார்கள்.

திருமலை க. வேலுப்பிள்ளை

## புதிய உறுப்பினர்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை தபால் தந்தி என்ஜினியர் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளை பல அங்கத்தவர்களின் வேண்டுகோளின்படி கலைக்கப்பட்டு பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொ. பஞ்சாட்சரம். உபதலைவர்: வி. பூதத்தம்பி, காரியதரிசி: திரு. சி. இராசையா, உப காரியதரிசி: திரு க. சரவணபவன், தனாதிகாரி; திரு. அ. பேக்மன்ஸ். நிர்வாகசபை உறுப்பினர்: திருவாளர்கள்: யோ. அந்தோனிப்பிள்ளை, சி தனபாலசிங்கம், வை. யோகநாதன், தி அருள்நாயகம், க. சுப்பிரமணியம் இ. மரியதாஸ், ச. கிருஷ்ணபிள்ளை, ச. மனோகரன்.

0 0 0

யாழ்ப்பாணம், புதன்

யாழ். நவரச நாடகாலயத்தின் 3-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் தலைவர் திரு. ம. அரியநாயகத்தின் தலைமையில் கூடியபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்: மகா. வந். ஆண்டகை எல். ஆர். அன்ரனி, வண பிதா என். எம். சவரிமுத்து, திரு கே. பேரம்பலம், திரு சி. மாசிலாமணி; தலைவர்: திரு. ம. அரியநாயகம், ஆலோசகர்கள்: திரு. எஸ் இராசேந்திரம் திரு ப பீற்றர், திரு ஜி பிரான்சிஸ்; செயலாளர்: திரு டி. டி. ஜோர்ஜ், உபசெயலாளர்கள்: திரு எஸ் எம். மரியநாயகம், திரு. எஸ். ஒறிஸ்ரி; பொருளாளர் திரு. எம். ஜெருட்; அமைப்பாளர்கள்: திரு. எம். அன்ரன், திரு பி. குணம், திரு பி. டோமினிக்.

(தே. நி.)



## நத்தாருக்கு நல்லதோர் விருந்து!

### இன்றுமுதல் குதூகல ஆரம்பம்

## ராஜா — யாழ். நகர்

தினசரி காலை 10, பிற்பகல் 2, மாலை 6, இரவு 9-30

- O சகல மதத்தினருக்குமான தீந்தமிழ் சித்திரம்
- O ஓசன்னா பாட்டுக்கான இசை அமைப்பு தேன்போன்றது
- O கடலின்மேல் ஏசுநாதர்நடப்பது, பாலைவனம்-குன்று ஆகியவற்றில் ஏசுநாதர் உபதேசம் செய்வது அருமையாக இருக்கின்றன.
- O சலொமை அர்ச். ஜோவானின் தலையைக்கேட்டு ஆடும் கவர்ச்சி நடனத்தைப் பார்க்கத் தவறாதீர்கள்.



# ஏசுநாதர் - தமிழ்

இப்படத்துடன் பாப்பரசரின் இலங்கை விஜயம்
தமிழில் 40 நிமிடங்கள் வரை
காண்பிக்கப்படும்.



## நத்தார் பண்டிகையை

நலமுடன் கொண்டாட
உங்களுக்கும் உங்கள் குழந்தைச் செல்வங்களுக்கும்
உகந்த

| | |
|---|---|
| கைத்தறி நெக்கா | ✶ பிறின்ரட் நைலக்ஸ் |
| சிலோன் மணிப்புரி | ✶ பிளேன் நைலக்ஸ் |
| அப்பலோ செக்சேட்டிங் | ✶ பெயின்ட் நைலக்ஸ் |
| ஜொயின்ட் நைலக்ஸ் | ✶ றெடிமேட் புளவுஸ் |

சேட்டிங் — சூட்டிங் — சன்சூட்ஸ்
மற்றும்
சகலவிதமான ஜவுளி வகைகளும் கண்கவர்
வண்ணக் கலர்களில் எமது கைவசமுண்டு.
உங்களின் நத்தார் தேவைகளைப்பூர்த்திசெய்துகொள்ள
எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.

# சீப்பசைட்

(வடஇலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)
186-188, கே. கே. எஸ், றோட்,
யாழ்ப்பாணம்.
(போன்: 479)



## நத்தார் - புதுவருட பண்டிகையை

முன்னிட்டு
புதிதாக வரவழைக்கப்பட்ட
✶ சிறுவர்களின் றெற்றன் கால்சட்டைகள்
✶ றெடிமேட் பிளவுஸ்கள்
பல மலிவான விலைகளில் உண்டு

# டயரூம்ஸ்

54—60, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மீதுவிழுந்த அடியை என்மீதுவிழுந்ததாகஉணர்கிறேன்

## கருணாநிதி கவலை

சென்னை, டிச. 23

ஆங்கிலத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆங்கில போதனையை நீக்க அதன் முக்கியத்துவத்தை குறைத்துவிடவோ நாம் எண்ணவில்லை. ஆனால் தமிழ்மொழியின் உரிமையை விட்டுக்கொடுக்கமுடியாது தமிழ்மொழி எதிர்ப்பை சமாளிப்பதற்கு எமது உயிர்களைப் பணயம்வைக்கவும் நாங்கள் தயாராய் இருக்கிறோம்.

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூறினார். வேலூரில் நடைபெற்ற திராவிடமுன்னேற்றக் கழகத்தின் மாநாட்டில் அவர் சொற்பொழிவாற்றினார்.

தமிழ்நாடு சென்னை செயலகத்தின் முன்னால் தமிழ்நாடு அரசின் மொழிக் கொள்கையை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம்செய்த மாணவர்கள்மீது தடியடிப்பிரயோகம் செய்யநேர்ந்தது குறித்து முதலமைச்சர் கவலை தெரிவித்தார். மாணவர்கள்மீது விழுந்த ஒவ்வொரு அடியையும் தம்மீது விழுந்ததாகவே தாம் உணர்வதாக திரு. கருணாநிதிகுறிப்பிட்டார்.

### ராஜாஜி பற்றி

இந்தமாநாட்டில் திரு அன்பழகன் எம். பி. பேசுகையில் திரு. ராஜகோபாலாச்சாரியார் தி. மு. கழகத்துடனான தொடர்புகளைத்துண்டித்துக் கொண்டதுபற்றி விவரித்தார். ராஜாஜி தமது கொள்கைகளை திராவிடமுன்னேற்றக் கழகத்தின்மீது திணிக்கப் பார்த்தார். அது முடியாது போனதால் எமது தொடர்பைத்துண்டித்துக் கொண்டார் என்று திரு. அன்பழகன் கூறினார்.

திருமதி இந்திராகாந்தி முற்போக்கு கொள்கைகளைக் கடைப்பிடித்து வருவதால் அவரைத்தாங்கள் ஆதரித்து வருவதாகவும் திரு. அன்பழகன் சொன்னார்.

அரசியல் தூண்டுகோள்களுக்கு மாணவர்கள் பலியாகக்கூடாதென்று மாநாடு கேட்டுக்கொண்டது.

இலங்கைவரும்

## பிரி. தாவரவியல் நிபுணர்

லண்டன், டிச. 22

பிரிட்டிஷ் விஞ்ஞான தொழில்நுட்ப இம்பீரியல் கல்லூரியின் தாவரவியல் போதனா பீடத்தைச்சேர்ந்த பேராசிரியர் ஆர். கே. எஸ். வூட் புதுவருட தினத்தன்று இலங்கைக்கு விஜயம்செய்யவிருக்கிறார். ஜனவரிமுதலாம் திகதியிலிருந்து பத்தாம் திகதி வரை இலங்கையில் தங்கவிருக்கும் அவர் தாவர நோயியல்பற்றி இங்கு விரிவுரைகள் நிகழ்த்துவார், பிரிட்டிஷ் கவுன்சில் இவரது விஜயத்தை ஒழுங்கு செய்துள்ளது பேராசிரியர் வூட் சர்வதேச தாவர நோயியல் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிவருகிறார்.

"எமது சர்வகலா சாலைகளில் பட்டம் பெறும் மாணவர்களில் 40 விகிதத்தினர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் இவர்களில் அனேகர் இலங்கையையும் இந்தியாவையும் சேர்ந்தவர்கள். இப்பழையமாணவர்களைநேரிலசந்தித்து அவர்களதுவாழ்க்கை தொழில்முறைபற்றி அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறேன்" என்று அவர் கூறினார்,

நகரங்களிலுள்ள

## வெற்று நிலங்கள் தேசிய நலனுக்குப் பயன்படும்

### கெனமன் சட்டம் தயாரிக்கிறார்

கோட்டை, திங்கள்

தலைநகரான கொழும்பிலும், மற்றும் நாட்டிலுள்ள பெரிய நகரங்களிலுமுள்ள வெற்றுக் காணிகளை அரசு பொறுப்பேற்கும். விரைவில் அரசாங்கம் இக்காணிகளை எடுத்து. தேசிய, சமூக, பொருளாதார, வர்த்தக சேவைகளுக்குப் பயன்படுத்தவுள்ளது.

இதன்பொருட்டுப் புதிய சட்டம் ஒன்றை ஆட்சிமன்றத்தில் தாக்கல்செய்யத் தேசிய வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் விரைவாகத் தயாரிக்கிறார்.

வெற்று நிலங்களை வைத்திருப்பவர்கள், அந்நிலங்களில் கட்டிடம் கட்டவேண்டுமானால், குறிப்பிட்ட கால எல்லைக்குள் கட்டிடம நிறுவ இச்சட்டம் இடமளிக்கும் கட்டிடங்கள் நிறுவப்படாமல் வெற்று நிலங்களாகக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பின்னரும் நிலம் வெறுமையாக இருக்குமானால் அவற்றை அரசாங்கம் சுவீகரித்துத் தேசிய நலனுக்காகப் பயன்படுத்துமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் வீடமைப்பு அமைச்சைச் சேர்ந்த குழு ஒன்று கொழும்பிலும் மற்றும் நகரங்களிலும் உள்ள காணிகளின் பயன்பாடு பற்றி ஆராய்ந்து சமர்ப்பித்த அறிக்கையின் பின்னரே அமைச்சர் மேற்படி நடவடிக்கையை எடுப்பதாக வீடமைப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# போலந்து துறை முகங்களில் ஊரடங்கு:

## பிரச்னைகளைத் தீர்த்து வைக்க புதிய தலைவர்கள் முயற்சி

### 80 சதவீதத் தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்

வார்சோ, டிச. 22

துறைமுக வேலைநிறுத்தங்களின் காரணமாக ஏற்பட்ட வன்முறைகளை அடக்குவதற்குப் போலந்தில் இரவு ஊரடங்குச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

கலவரங்கள் பற்றி நியாயமான விசாரணைகள் நடத்தப்படுமெனவும், பொருளாதார, நீர்ப்பாசனப் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட போலந்துக் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு. எட்வேர்ட் கிரெக் தெரிவித்தார். 80 சதவீதத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

அண்மையில் கோமுல்கா தலைமையிலான அரசாங்கம் பொருட்களின் விலைவாசியை அதிகரித்தது, இதனால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 20 பேர்வரை கொல்லப்பட்டனர். பால்டிக் துறைமுகத்திலிருந்து வன்முறைச் செயல்கள் ஆரம்பமாயின. இதனால் 14 வருடங்களாகப் போலந்தின் தலைமைப் பதவியை வகித்துவந்த கொமுல்கா தமது பதவியை ராஜினமா செய்தார். இவரது ராஜினமாவைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு கூடி, புதிய தலைவராகச் சிறந்த பொருளாதாரத் தொழில்நுட்ப நிபுணரான திரு. எட்வார்ட் கிரெக் தெரிவுசெய்யப்பட்டார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நீர்ப்பாசனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை விரைவில் செயற்படுத்தப் போவதாகவும், தொழிலாளர்களுக்குச் சம்பளம் கூட்டுவது பற்றித்தான் யோசித்துவருவதாகவும், எப்படி இருந்தபோதிலும் நாடு இன்றிருக்கும் துன்பநிலையில் நாட்டின் நன்மையை மனதிற்கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார். சோஷலிஸப் பாதையிலிருந்து எங்களை யாரும் திசை திருப்பிவிடமுடியாது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் கரையோரப் பகுதிகளிலும் துறைமுகங்களிலும் வன்முறைச் செயல்களும், ஆர்ப்பாட்டங்களும் நடப்பதனால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### தொழிலாளர் வேலைக்கு திரும்பினர்

துறைமுகங்களிலும், தொழிற்சாலைகளிலும் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களில் கிட்டத்தட்ட 80 சதமானோர் வேலைக்குத் திரும்பியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. நாட்டில் இப்பொழுதிருக்கும் குழப்ப நிலைமை பற்றிக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப்பீடம் ஆராய்ந்து வருகிறது.

### ரஷ்யா ஆதரவு

தற்பொழுது போலந்துத் தலைமைப்பீடத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைச் சோவியத் தலைவர்கள் வரவேற்றுள்ளனர்.

நாட்டில் பொருட்களின் விலைவாசியை உயர்த்தியதை திரு. கிரெக் கடுமையாக [illegible] திர்த்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

### பீகிங் கண்டனம்

போலந்தில் கலவரங்கள் ஏற்பட்ட சமயத்தில் எல்லைப் பிரதேசத்தில் சோவி[illegible] [illegible] ருவிக்கப்பட் [illegible] பீகிங் கண்டனம் செய்துள்ளது.

துக்கான பல முன்னேற்ற நடவடிக்கைகளில் வெற்றி பெற்றார் அவர் தொழிலாளிகள் இல்லங்களில் மகிழ்ச்சி பொங்கவும், அவர்களுக்கு வசதியான கடைகள் கார்கள், வாராந்த கால் பந்தாட்டம், விளையாட்டுகள் போன்ற வசதிகளைச் செய்து கொடுக்கவும் அவர்காரணமாக இருந்தவர், சைலீஸியா பிரதேசம் போலந்தின் 'கட்டங்கா' என்ற புகழ் பெறும் அளவுக்குபாடு பட்டார்.

— —

பிரம்மபுத்திராவில்

## படகு கவிழ்ந்து 12 பேர் பலி

புதுடில்லி. டிச. 22

பிரம்மபுத்திரா நதியில் உள்ளூர் படகொன்று கவிழ்ந்ததினால் 14 பேர் பலியாகியிருப்பதாகச் செய்திவந்திருக்கின்றது 17 பேர் கொண்ட யாத்திரிகர்கோஷ்டியொன்று இந்தப்படகில் பிரயாணம் செய்ததாம் படகு திடீரென்று கவிழ்ந்ததால் 12 பேர் மூழ்கிமரணமாகியிருக்கிறார்கள்.

— —

## "சோஷலிசத்தை அடைய தியாகம் தேவை" — பிரதமர்

கோட்டை, செவ்வாய்

'தியாகங்கள் இன்றி சோஷலிசத்தை அடைய முடியாது.' கடந்தவார இறுதியில் கூடிய லங்கா சுதந்திரக்கட்சியின் செயல் கமிட்டிக் கூட்டத்தில் பிரதமர் திருமதி பண்டார நாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் தொடர்ந்து பேசுகையில் தியாகங்கள் என்ற சொல்லை எனக்குப் பயன் படுத்தவிருப்பமில்லையெனினும் கட்சியின் குறிக்கோளை நாம் நிறைவேற்றவேண்டுமானால் அங்கத்தவர்கள் தியாக மனப்பான்மையுடையவராகவிருக்கவேண்டும் என குறிப்பிட்டார்.

# கோமுல்கவுக்கு கடும் சுகவீனம்

போலந்து கம்யூனிஸ்கட்சித் தலைமைப் பதயிலிருந்து விலகிக்கொண்ட திரு. விலாடிஸ்லாவ் கோமுல்கா கடும் சுகவீனமுற்றிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

63 வயதான கோமுல்கா போலந்து கம்யூனிஸ்ட்கட்சியின் பிரதம காரியதரிசியாக 14 ஆண்டுகள் ஆட்சி புரிந்தபின்னர் தம் பதவியைத் துறந்து இருக்கிறார்.

கோமுல்கா அரசாங்கம் சிறியகாலத்தில் பெரிய அளவில் விலைவாசி அதிகரிப்புகளை அறிவித்ததைத் தொடர்ந்து பால்டிக் துறைமுகங்களில் வன்முறைகள் வெடித்தன. இதனால் 20 பேர்களுக்கு மேல் கொல்லப்பட்டார்கள், நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தார்கள்.

கத்தோலிக்கர்களை பெரும்பான்மையாகக் கொண்ட போலந்தில் கிறிஸ்மஸ் காலத்தில் பொருட்களின் விலைகளை திடீரென ஏற்றியதின் காரணமாக கோமுல்கா அரசு பெரும் தவறிழைத்துவிட்டதாக வார்ஸாவில் அவதானிகள் கருத்து தெரிவித்தார்கள். கட்சித் தலைமைப்பீடத்திலிருந்து இவர்கள் வெளியேறியதற்கு இப்போதைய கலவரங்களுக்கு அவர்களே பொறுப்பு என்று குற்றஞ்சாட்டப்பட்டதே காரணம்'

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த

## மண்டப வேலைகளில் திறமை காட்டினால் வேலை

கோட்டை, செவ்

கொழும்பு, பௌத்தாலோக மல்வத்தையில் நிர்மாணிக்கப்படும் பண்டார நாயக்க ஞாபகார்த்த மண்டப நிர்மாண வேலைகளில் சிரமதான முறையில் ஈடுபட்டு விசேஷத் திறமை காட்டும் வெளியூர் வாசிகளுக்கு அரசாங்க பட்டறைகளிலும் பணிமனைகளிலும் வேலைவசதி செய்துகொடுக்கப்படும்.

அடுத்த ஜனவரிமாதம் முதற்கொண்டு வாரந்தோறும் கிராமப் பகுதிகளிலிருந்து கோஷ்டிகோஷ்டியாக ஊழியர்கள் கொழும்புக்கு வந்து பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டப வேலைகளில் சிரமதான முறையில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது இப்படி வரும் தொண்டர்களில் விசேஷத் திறமையுள்ளவர்களை அரசாங்கப் பணிகளிலும் ஈடுபடுத்திக் கொள்வதற்கு வீடமைப்பு நிர்மாணப்பகுதி அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் முடிவு செய்திருக்கிறார்

கி, ஜெர்மனியில்

## இலங்கைக் குழுவை கவர்ந்த திட்டம்

பேர்லின், டிச. 22

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் தொழிலாளர்களுக்கு ஓய்வுகால பயிற்சியளிக்கப்படும் முறை இலங்கையிலிருந்து சென்ற தூதுகோஷ்டியொன்றைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றது.


பம்புகளும் கொம்பிரஸர்களும் தயாரிக்கும் தொழிலாளர்களின் ஓய்வு காலப் பயிற்சிப் பாடசாலைக்கு இந்தக் குழு விஜயம் செய்தது. திரு. மகிந்த ராஜபக்ஷ எம். பி. தலைமையில் இக்கோஷ்டி கிழக்குஜெர்மனிக்கு விஜயம் செய்தது.

இலங்கைப் பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டார நாயக்காவின் புதல்வர் திரு. அனுரா பண்டார நாயக்காவும் இக்குழுவில் இருந்தார் ஜெ ஜ. குடியரசு இளைஞர் இயக்கத்தின் ஆதரவில் அவர்கள் இங்குவிஜயம் செய்தனர், (ஏ.டி.என்.)

பகலில் கொளுத்தும் வெய்யிலிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகலில் கொளுத்தும் வெய்யிலிலும் இரவில் கடுங் குளிரிலும் பாடுபட்டு உழைக்கும் உங்களுக்கு இதோ!



கணப்பொழுதில் செயலாற்றும்.
புது முறை

அசல்
(ரோஜாவர்ணம்)
வின்சென்ட்ஸ்
ஏ.எஸ்.சீ
வில்லைகள்

விரிவான விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக உருவாக்கப்பட்டுள்ள உடனுக்குடன் மூவ் வழியில் செயலாற்றும் புது முறை வின்செண்ட் ஏஎஸ்சி இளஞ் சிவப்பு வில்லைகள் தலையிடி, நோவு, வலி, காய்ச்சல் ஆகியவற்றிலிருந்து உங்களுக்கு உடனடியாகவும் நிலையாகவும் நிவாரணந் தந்து, ஊக்கமும் உற்சாகமும் உடல் நலமும் உடையவர்களான உணர்வை மீட்டுத் தருகின்றன. வலி, காய்ச்சல் என்பன நிலைத்து நின்றால் உங்கள் வைத்தியரைக் காணுங்கள்.




உட்கொள்ளுங்கள்
மூவ் வழிச்
செயற்பாடுடைய
வின்செண்ட்
இளஞ் சிவப்பு வில்லை
கள். அவை

விரைவில் செயலாற்றுவன, பாதுகாப்பானவை, நிச்சய குணமளிப்பன.


போலந்தில் கலவரங்கள் ஏற்பட்ட சமயத்தில் எல்லைப் பிரதேசத்தில் சோவியத் படைகள் குவிக்கப்பட்டதை பீகிங் கண்டனம் செய்துள்ளது.

## புதியதலைவரின் வரலாறு

போலந்தின் புதிய தலைவராக பொறுப்பேற்றிருக்கும் திரு. எட்வார்ட் கிரெக்கிற்கு வயது 57. இவர்தமது 13ம் வயதிலிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழியராகப்பணி பணிபுரிந்து வந்துள்ளார்.

சைலீஸியா சுரங்கத் தொழிலாளர்களுக்கு சுபீட்சம் தேடித்தந்தவர் என்ற முறையில் அவருக்கு புகழ் ஏற்பட்டது. போலந்தில் நாட்பட்ட பொருளாதாரச் சிக்கல்களுக்கு நிதானமாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்று கருதிய ஒரு கோஷ்டியின் தலைவராக வ இவர் கட்சிக்குள் கணிக்கப்பட்டு வந்திருக்கிறார். தமதுவாழ்க்கையின் சரிபாதி காலத்தை அவர் பிரான்ஸிலும், பெல்ஜியத்திலும் கழித்திருக்கின்றார். 1923ம் ஆண்டு தமது தாயாருடன் பிரான்சுக்குச் சென்று தமது 13ம் வயதிலேயே நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைசெய்யத் தொடங்கினார்.

8 ஆண்டுகளின்பின் பிரஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். ஆனால் சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் பங்குகொண்டதால் 1934ம் ஆண்டு போலந்திலிருந்துநாடு கடத்தப்பட்டார் 3 ஆண்டுகளின் பின்னர் அவர் மீண்டும் வெளி நாட்டில் குடியேறினார். இந்த முறை பெல்ஜியத்துக்குச் சென்று கிரெக், அங்கு ஒரு சுரங்கத் தொழிலாளியாக வேலை செய்யத் தொடங்கியதுடன் கம்யூனிஸ்ட் கட்சியிலும் தீவிர அங்கத்தவரானார். பின்னர் நாஸிகளை எதிர்க்கும் பெல்ஜியம் இயக்கத்தில் சேர்ந்து கொண்டார். பின்னர் மீண்டும் தாய்நாடு திரும்பி சைலீஸியாவில் கட்சி அங்கத்தவராகச் சேர்ந்து கொண்டதுடன் சுரங்கத்தொழில் எஞ்சினியரானவதற்கென்று தீவிரமாகப்படிக்கவும் தலைப்பட்டார், பின்னர் கட்சியின் முக்கியஸ்தராக வளரத் தொடங்கினார் போலந்தின் மத்தியிலுள்ள காட்டாவைஸ், சைலீஸியா சுரங்கத் தொழில் பிரதேசத்தின் கம்யூனிஸ்ட் கட்சிக்காரியதரிசியாக அவர் நியமிக்கப்பட்டார். இங்குதான் சுரங்கத் தொழிலாளிகளின் சுபீட்சத்

குறிக்கோளை நாம் நிறைவேற்றவேண்டுமானால் அங்கத்தவர்கள் தியாக மனப்பான்மையுடையவராகவிருக்கவேண்டும் என குறிப்பிட்டார்.

## "நாடகமே சினிமாவின் பள்ளி"

யாழ்ப்பாணம், புதன்

"இயல்பாகவே வித்துவக் காய்ச்சல் பொருந்திய கலைஞர்களை ஒன்று சேர்த்து வளர்ந்து வரும் ஸ்தாபனம் கட்டுக்கோப்புக் குலையாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுடன் இயங்கவேண்டுமானால் கலைஞர்களைக் கட்டுப்படுத்தி நடத்தத்தக்க சட்ட அமைப்புஅவசியம். ஆன்மாவானது சிவத்தைக்காண வேண்டுமானால் திருவுருவை முன்னே விட்டுத் தான் பின்னே செல்வதுபோல், நாடக, சினிமா தயாரிப்பு முயற்சியில் நவரச நடாகாலயம் வெற்றிபெறவேண்டுமானால் சட்டத்தை முன்னே வைத்து அதன்பின்னே செல்லவேண்டும். இன்று தோன்றி நாளை மறையும் ஸ்தபனமாக அமையாது, நின்று நிலைத்து இந்நாடகக் கலையை வளர்க்கும் வளர்ப்புத்தாயாக இத்தாபனம் அமையவேண்டும். சினிமாவில் நடிக்கவிரும்பும் கலைஞர்கள் நாடகம் என்னும் பள்ளியில் நன்கு பயின்று பயிற்சி பெறவேண்டும் பங்குபற்றும் நடிக நடிகையர்களுக்கும் மற்றும்கலைஞர்களுக்குந்தகுதிக்குஏற்பஊதியம் கொடுக்கவேண்டும். அடுத்த ஆண்டில், நம் மேடையேற்றிய சிந்தனைச் சிற்பியின் 'அழகவல்லி' நாடகத்தை இந்நாடகாலயம் சினியாவாகத் தயாரிக்க வேண்டும்."

இவ்வாறு நவரச நாடகாலயம் என்னும் நாடக, சினிமா, தயாரிப்பு ஸ்தாபனத்தின் சட்ட அமைப்பு திருத்தப் பிரேரணையின் இரண்டாவது விவாதம் அட்வக்கேட் சதா, ஸ்ரீநிவாசன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் உப-தலைவர் திரு. ஆர். ஸி மன்மதராயன் பேசும்போது கூறினார்.

உபதலைவர்களில் ஒருவராகிய அ. சோமாஸ்கந்தன், இணுவையூர் த. சிதம்பரநாதன், கே. கே. வி செல்லையா, செ. த தெட்சணமூர்த்தி, செயலாளர்: செ இராஜா ஆகியோரும் பேசினார்கள்.

லும் ஈடுபடுத்திக் கொள்வதற்கு வீடமைப்பு நிர்மாணப்பகுதி அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் முடிவு செய்திருக்கிறார்

## பலவருடத்தின்பின் இயங்கும் ச.ச. நிலையம்

யாழ்ப்பாணம், புதன்

சிறுப்பிட்டி தெற்கு சனசமூக நிலைய பொதுக்கூட்டம் பலவருடங்களின் பின்னர் சனசமூக நிலைய உத்தியோகத்தர்திரு வீ கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்புவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்-திரு. கே. தர்மலிங்கம், தலைவர்- வே பரிமேலழகபிள்ளை உபதலைவர் பீ. நித்தியானந்தம், செயலாளர்: வீ. வீ இராஜரத்தினம், உபசெயலாளர்: கே கேசலிங்கம். பொருளாளர்: வே. அனவரதவிநாயகம்பிள்ளை, உப பொருளாளர்: சி. கனகசபை நிர்வாக சபை உறுப்பினர்களாக ஐவர் தெரிவுசெய்யப்பட்டனர் நூலக பொறுப்பளர் ஆர். யோசரத்தினம் கணக்குப் பரிசோதகர் எஸ். கனகசுந்தரம்.

பலவருடகாலமாக இயங்காமலிருந்த சிறுப்பிட்டி தெற்கு சனசமூக நிலையத்தைச் சீர்திருத்த உதவுமாறு சிறுப்பிட்டி தெற்கு மக்கள் சார்பில் திரு. வீ வீ, இராஜரத்தினம் யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் முறையிட்டதன் பலனாக இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. கிருஷ்ணசாமி தலைமை வகித்துப் பேசுகையில் பல சனசமூக நிலையங்கள் இதே போன்று முறையாக இயங்காதிருப்பதால் அச்சங்கங்கள் மூலம் ஏற்படக்கூடிய நன்மையை கிராமத்திற்கு ஏற்படுத்த முடியாதிருப்பதெனவும், இந்த சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டத்தைகூட இரு அறிவித்தல் கொடுத்தும் பழைய நிர்வாகத்தனர் முன்வராதனையிட்டு கவலைப்படுவதாகவும், புதிய சபை சிறந்து செயலாற்றும் என்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

காரியதரிசி திரு. வீ. வீ. இராஜரத்தினம் தன்னை ஏகமனதாகத் தெரிவு செய்ததற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், இந்தச் சங்கத்தை துரிதமாக்குவதற்கு கிராம மக்களும் நிர்வாக சபையினரும் அயராது உழைக்க வேண்டுமென்றார்.

(கு. வீ. ம)

நாயக்காவும் இக்குழுவில் இருந்தார் ஜெ ஐ. குடியரசு இளைஞர் இயக்கத்தின் ஆதரவில் அவர்கள் இங்குவிஜயம் செய்தனர். (ஏ.டி என்.)

## பொலிசார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளை காரியாலயத்துக்கு முன்னால் கண்டெடுக்கப்பட்ட 'டைனமைட்' நேற்று முன்தினம் இரசாயனப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதுபற்றி விசாரணை செய்வதற்காக இரண்டு இரகசியப் பொலிசார் கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். இரசாயனப் பகுதியிலிருந்தும் இருவர் யாழ் வந்துள்ளனர்.

இக்கைக்குண்டு சம்பந்தமாக மூவரைப் பொலிசார் தேடிவருகின்றனர் தேடப்படுபவர்களில் ஒருவர் இன்று பொலிசாரிடம் சரணடைவார் என பொலிசார் எதிர்பார்க்கின்றனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. கட்சிக்கிளைக் காரியாலயத்தில் நேற்றுப் பொலிஸ் காவல் இருந்தது.

## பாராட்ட முடிவு

கிளிநொச்சி, செவ்

யாழ். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ஏ. யோசேப், யாழ் மேலதிக அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்வதால் அன்னாரின் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்க கிளிநொச்சிப் பட்டின சபையினர் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளதாகப் பட்டினசபைத் தலைவர் தெரிவித்தார்.

## மூதாட்டி கொலை வழக்கு

யாழ்ப்பாணம், புதன்

மீசாலை மூதாட்டி கொலை வழக்கு நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

எதிரிகள் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டனர் எதிரிகள் சார்பில், அட்வகேட் தம்பிரத்தினம், புறக்டர் வி செல்லத்தம்பியின் அனுசரணையுடன் ஆஜரானார். மாஜிஸ்திரேட் விசாரணையை ஜனவரி 6-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உண்மையான தேசபக்தி என்பது, எதற்கும் அயல்நாடுகளை நம்பி இருக்காமல், தங்களுக்குத் தாங்களே உதவிசெய்துகொள்ளவேண்டும் அப்படி ஒரு நாடு செய்துகொள்ளவில்லை எனில், அந்நாடு இன்னும் முன்னேற்றமடையவில்லை என்பதே அர்த்தமாகும்.
— விவேகானந்தர்.

ஈழநாடு
Eelanadu ... Jaffna Daily
Telegrams "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna. Telephone 889

... சாதாரண வருடம் மார்கழி மாதம் 8-ந் திகதி (23-12-70)

## உதவி மந்திரியின் கருத்து

ஆசிரிய நியமனங்கள் அந்தந்த தொகுதி ஆட்சி மன்றப் பிரதிநிதிகளின் விருப்பு வெறுப்புகளின் படியும் அவர்களின் சிபார்சுகளின்படியும் நடைபெறக் கூடாதென்றும் தகுதியும் தராதரமுமே ஆசிரிய நியமனங்களுக்கு முழு அடிப்படைக் காரணமாக இருக்க வேண்டுமென்றும் உதவிக் கலாசார அமைச்சர் திரு சோமவீரசந்திரசிறி கெஸ்பாவையில் உள்ள பாடசாலையில் ஓய்வு பெறும் ஆசிரியர்கள் சிலருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரவைபவம் ஒன்றில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார். ஆசிரிய நியமனங்கள் மட்டுமல்ல எந்த நியமனங்களுமே திறமை, தகுதி அடிப்படையில் தான் நடைபெறவேண்டும் என்பதை நாம் இப்பத்தியில் பல தடவைகளிலும் வலியுறுத்திவந்திருக்கிறோம்.

பஸ் கண்டக்டர்கள் நியமனம், பட்டதாரி ஆசிரிய நியமனம் இப்படிப் பல நியமனங்களுக்கும் அந்தத் தொகுதி ஆட்சிமன்றப் பிரதிநிதிகளின் சிபார்சு கோரப்பட்டபொழுது இது பல புதிய பிரச்னைகளை உருவாக்குமென்றும் தொகுதிப் பிரதிநிதிகளுக்குக் கூட இது சங்கடமான நிலையை ஏற்படுத்துமென்றும் நாம் எடுத்துக்காட்டியிருந்தோம். பட்டதாரி ஆசிரியநியமனத்தில் இது தெளிவாகியது. இப்போது உதவி அமைச்சரே இதை ஒப்புக்கொண்டிருக்கிறார். தொகுதிப் பிரதிநிதிகளின் சிபார்சின் மீது சமீபத்தில் பட்டதாரி ஆசிரிய நியமனம் நடைபெற்றதால் தாங்கள் பழிக்காளானதாகவும் இதனால் ஆசிரிய நியமனத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டுமென்று தாம் அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாகவும் உதவி அமைச்சர் கூறியிருக்கிறார்.

கல்வியிலும் சரி நியமனங்களிலும் சரி வேறு எதிலாலும் தகுதிக்கும் திறமைக்குமே மதிப்பளிக்கப்படுமென்றும் வேறு எந்தவகையிலும் பாகுபாடு காட்டப்பட மாட்டாதென்று தான் ஆட்சிக்கு வந்ததும் அமைச்சர் பலரும் தெரிவித்தனர்.

யாருடைய தூண்டுதலோ, முன்னைய ஆட்சியாளர்கள் செய்ததற்குப் பரிகாரம் தேடுவதற்கு இதுதான் வழியென்று சிலர் கருதியதாலோ அல்லது அடுத்த பொதுத்தேர்தலின் வெற்றியைக் கருத்தில் கொண்டதாலோ கட்சி அரசியலும் வேறு காரணங்களும் கல்வியிலும் நியமனங்களிலும் நுழைந்து தகுதி, திறமை, நேர்மை என்பவற்றைப் பின்தள்ளி வைத்துவிட்டன.

இதன் விளைவை உதவிக் கலாசார அமைச்சர் தெரிந்துகொண்டிருப்பதுபோல் மற்றவர்களும் அறிந்துகொண்டால் எந்த நியமனங்களிலும் எந்தத் துறையிலும் தகுதிக்கும் திறமைக்கும் முதலிடமளிக்கும் நற்பண்பு தளைக்கும்; அரசாங்கத்தின் நற்பெயரும் காப்பாற்றப்படும்.

## ஆர். ஜி.யின் மறைவு

இலங்கை அரசியலில் பலவிஷயங்களில் ஓர் உதாரணமாக விளங்கிய திரு. ஆர். ஜி. சேனநாயகா காலமானார் என்ற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தா... பவமுடையவர். இரண்டு தொகுதிகளில் ஒரே சமயத்தில் போட்டியிட்டு இரண்டு தொகுதிகளிலும் வெற்றியீட்டி ஒரு சாதனையை நிலைநாட்டியவர்.

# லங்கா சமசமாஜக்கட்சியும் அதன் மொழிக் கொள்கையும்

**லங்காசமசமாஜக் கட்சியின் 35-வது ஆண்டு நிறைவை யொட்டி வெளியிடப்பட்ட மலரில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் இது இதன் முதற்பகுதி நேற்று இப்பக்கத்தில் வெளிவந்திருந்தது.**

இன்று மாத்திரம் லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு சுதந்திரக்கட்சியோடு சேர்ந்து ஐக்கிய முன்னணியை உருவாக்கவில்லை. ஆனால் இத்தகைய அரசாங்கம் ஒன்று உண்மையில் வரவே இருந்தது. சிலவருடங்களுக்கு முன்னர் சுதந்திரக்கட்சி போன்ற கட்சிகளுடன் கூட்டுச்சேரும் கொள்கையை நாம் எதிர்த்தோம்.

### கூட்டுமுன்னணி அமைக்கும் நோக்கம்

எமது கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் முதலாளித்துவ வாதிகள் ஏகாதிபத்திய வாதிகளை எதிர்த்துபோராடும் பட்சத்தில்மற்றும் கட்சிகளோடு சேர்ந்து ஐக்கிய முன்னணிகளை உருவாக்கும் நோக்கம் இருந்தது இந்த அடிப்படையில் உலக மகா யுத்தத்துக்கு முன்னர் எமது கட்சி திரு குணசிங்காவின் தொழிற்கட்சியுடன் இணைந்து ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்தது இந்த ஐக்கியமுன்னணி குறுகிய காலத்துக்கே நீடித்தது.

இதேபோன்று யுத்தத்துக்குப் பின்னரும் 1953-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற ஹர்த்தாலின் போது எங்கள் கட்சி இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, பிலிப் குணவர்த்தனவின் புரட்சிவாத சமசமாஜக் கட்சி ஆகியவற்றோடு சேர்ந்து ஐக்கிய முன்னணியொன்றை அமைத்தது மட்டுமன்றி ஜனாப் அஸீஸின் தொழிலாளர் காங்கிரஸ், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் சமஷ்டிக்கட்சி ஆகியவற்றோடு சேர்ந்தும் ஐக்கிய முன்னணியமைத்தது

இதற்கு இந்தோனேசியா, கானா, ஐக்கிய அரபுக் குடியரசு ஆகியநாடுகள் சிறந்த உதாரணங்களாகும். இதன் பலனாக லங்கா சமசமாஜக் கட்சியும் பொதுவான கொள்கைகள் அடிப்படையில் அரசாங்கம் அமைக்க சுதந்திரக்கட்சியோடு சேர்ந்து கூட்டரசாங்கம் அமைக்கவழிவகுத்தது.

வேறுவிதமாக இதைக் கூறவேண்டுமானால் யுத்தத்துக்கு முன்னைய நிலைமை இத்தகைய ஒரு கூட்டுச் சேர்கைக்குஇடமளிக்வில்லை. அப்போது சர்வதேச அரங்கில் ஒவ்வொரு வகுப்பினருக்கும், கட்சிகளுக்கு மிடையில் உள்ள தொடர்பு திருப்திகரமானதாக இருக்கவில்லை தொழிலாளர் வகுப்பினரின் கட்சி மற்றைய கட்சிகளுடன்உடன்படிக்கை செய்வதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது ஆனல் யுத்தத்துக்குப் பின்னர் நிலைமை மாறியது. தொழிலாளர் கட்சிகளுக்குச் செல்வாக்குப் பெருகியது மற்றக் கட்சிகளுடன் கூட்டுச் சேரா, உடன்படிக்கைகள் செய்யவாய்ப்புகள் இக் கட்சிக்குக் கிடைத்தது. இதன் பிரகாரம் எமது கட்சியாகிய சமசமாஜக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் இரண்டுக்கும் பொதுவான கொள்கைகளின் கீழ் ஒன்றிணைந்து அரசாங்கம் அமைத்தது சரியானதேயாகும். மார்க்ஸிச கோட்பாட்டின் படியும் இது சரியானதொன்றேயாகும்;

இவ்வாறிருப்பினும் நாம் ...

பெரமுனவை உருவாக்கின. இந்த மகாஜன எக்சத் பெரமுன சிங்கள மொழி மாத்திரமே அரசகரும மொழியாக இருக்கவேண்டும், நியாயமான இடம் தமிழுக்குக் கொடுக்கப்படும் என்ற கொள்கையை ஆதரித்தது.

தேர்தல் நெருங்கும் கட்டத்தில் ஐக்கியதேசியக் கட்சியும் சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகரும மொழியாக இருக்கவேண்டும் எனத் தீர்மானித்தது.

இவ்வாறிருந்த பொழுதும் 1956-ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போதும், 1960-ம் ஆண்டு மார்ச், ஜூலை மாதங்களில் நடைபெற்ற தேர்தல்களின் போதும் லங்கா சமசமாஜக் கட்சி தனது மொழிக் கொள்கையை மாற்றவில்லை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் நாட்டின் அரசகரும மொழிகளாகவிருக்க வேண்டும் என்ற கொள்கையை உறுதியாக எமது கட்சி கடைப்பிடித்து வந்தது.

### மொழிக் கொள்கையை மாற்றக் காரணம்

1963-ம் ஆண்டு திரு. பிலிப்குணவர்த்தனவின் 'மகாஜன எக்சத் பெரமுன'வுடனும் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் சேர்ந்து ஐக்கிய இடதுமுன்னணியை உருவாக்கும் தருணத்தில் சமசமாஜக் கட்சி தனது மொழிக் கொள்கையை மாற்றியது.

இதுவரைகாலமும் சிங்கள ...

**— லெஸ்லி. குணவர்த்தன —**
**( போக்குவரத்து அமைச்சர் )**

சிறு சமூகத்தவர்களது பயங்களை நீக்கி, அவர்களுக்கு உறுதிமொழிகளை வழங்குவதன் மூலம் தேசிய ஒற்றுமையை உருவாக்கலாமென்பது உறுதியாகும்.

இலங்கையின் நிலையை விளங்கிக்கொள்வதற்கு மேற்படி கருத்துப் பிரயோசனமானதாகும். இக்கருத்து தேசிய ஒற்றுமைக்குச் சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் மனதில் உள்ள பீதியைப் போக்கவேண்டுமென வலியுறுத்துகிறது. இலங்கையின் பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள் தங்களைப் பெரும்பான்மையினராகக் கருதாது சிறுபான்மையினராகவே கருதவேண்டும்.

### சிங்களவர் சிறுபான்மையினர்

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள். இலங்கையில் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களைத் தென்னிந்தியாவில் வாழும் தமிழர்களோடு சேர்த்து நோக்குகையில் தமிழ் மக்களே பெரும்பான்மையினராகின்றனர். இலங்கையின் வரலாற்றைப் பற்றி ஒருவர் சிந்திப்பாராயின் இந்த இருபகுதியினருக்கும் இடையில் நடைபெற்ற போராட்டங்களே அதில் நிறைந்துள்ளதைக் காணலாம்.

இந்தக் காரணங்கள் யாவும் சிங்களமக்கள் இலங்கையில் பெரும்பான்மையினராக இருந்தாலும் அவர்கள் தங்கள் சமுதாயத்திற்காகவும், மொழிக்காகவும் ஏங்குகின்ற ஒரு நிலைமை உள்ளதென்பதைக் காட்டுகின்றது.

இதை வேறுவிதமாகக் கூறின் சிங்கள மக்களிடையேயுள்ள பீதியும், நிச்சயமற்ற தன்மையும் மற்ற நாடுகளிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனத்தவரின் நிச்சயமற்ற தன்மைக்கும், பயத்துக்கும் ஒப்பிடத்தக்கவையாகும்

எனவே மற்ற நாடுகளிலுள்ள சிறுபான்மைத் தேசிய இனத்தவர்களோடு என்னென்ன விசேஷ சலுகைகள் தேசியஒற்றுமையை உருவாக்க வழங்கப்படுகின்றனவோ, அதுபோன்று இந்நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டச் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

எனவேதான் சட்டத்தின் மூலம் அரசாங்க அலுவல்களில் சிங்கள மொழிக்கு விசேஷ இடம் அளிப்பது அவசியமாகிறது. மேலோட்டமாக நோக்கும்பொழுது இச்செய்கை, தமிழ் மக்களுக்கு அநீதி இழைப்பதாகத் தோன்றினாலும் எங்கள் மொழிக்கொள்கையில் நாங்கள் ஏற்படுத்தியுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் நியாயமானதென்பது மேற்குறிப்பிட்ட காரணங்களால் தெளிவாகும். (முற்றும்)

## தேசிய மாணவர் சங்க யாழ் கிளை உதயம்

யாழ்ப்பாணம், புதன் இலங்கை தேசிய மாணவர் சங்கத்தின் யாழ். கிளை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் மாணவர் பிரச்னையை தீர்க்க ஆலோசனை கூறுவதே இச்சங்கத்தின் நோக்கமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து ...

... கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவராக திரு. வே. பொன்னம்பலமும், காரியதரிசியாக திரு ஸ்ரீகெங்காதரனும், தனாதிகாரியாக திரு எஸ். வி. முதலியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

9 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பெத்தலகேமில் கட்டுப்பாடு

பெத்தலேம், டிச 22 யேசுபெருமான் உலகில் அவதரித்த தினமான கிறிஸ்மஸ் பண்டியை உலகம் முழுவதும் கொண்டாடவிருக்கின்றனர் இந்த கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தையொட்டி உலகின் பல பாகங்களிலிருந்தும் யேசு பிறந்த இடமான பெத்தலேமுக்கு மக்கள் சென்றவண்ணம் இருக்கின்றனர் ஆனல் பெத்தலேமிலிருந்து வரும் செய்திகள் இதற்கு மாறாக உள்ளன பெத்தலேம் பகுதியில் ஆயிரக்கணக்கான இஸ்ரேல் இராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர் இஸ்ரேல் அரசாங்கத்தின் அனுமதி பெற்றவர்கள் தவிர வேறு யாரும் பெத்தலேமுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்படுகிறது யேசு அவதரித்த நாளான மார்கழி 25-ந் திகதி காலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு வரை மிகவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதாக அச் செய்திகள் தெரிவிக்கின்றன 1967-ம் ஆண்டு ஜோர்டான்மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியபொழுது பெத்தலேமை இஸ்ரேல் கைப்பற்றியது.

......

### சுவர்க்கவாயில் ஏகாதசி

யாழ்ப்பாணம், புதன் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராசப் பெருமாள் கோயிலில் சுவர்க்க வாசல் ஏகாதசி உற்சவம் ஜனவரி மாதம் 7 ம் திகதி நடைபெறவிருக்கிறது சுவர்க்க வாயில் ஏகாதசி இம்மாதம் 24-ம் திகதி என சில கலண்டர்களில் அறிவிக்கப்பட்டிருப்பதால் அத்தினம் சாதாரண ஏகாதசியென்றும் சுவர்க்க வாசல் ஏகாதசியல்லவென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## காதல் போட்டி கத்தி முனையில்!

மீதோட்டமுல்லை, செவ். காதல் போட்டியினல் ஏற்பட்டதாகக் கூறப்படும் சண்டையில் நண்பர்கள் இருவர் கத்தியால் வெட்டுப்பட்டுக் கொண்ட சம்பவம் முகத்துவாரம் என்னும் இடத்தில் நடந்துள்ளது.

இவ்விருவரின் காதலுக்குரிய கன்னி ஒருவரைத் தனது காதலனாகவும் மற்றவரைத் தனது ஆருயிர் நண்பனாகவும் ஏற்றுக்கொண்டதாகவும் இதைப்புரிந்து ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசியலில் பலவிஷயங்களில் ஓர் உதாரணமாக விளங்கிய திரு. ஆர் ஜி. சேனநாயகா காலமானுர் என்ற செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தாவிட்டாலும் நிச்சயம் அனுதாபத்தை ஏற்படுத்தும். அரசியலில் அவர் சாந்தி பெறவில்லையாயினும் அவரது ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திப்போம்.

உலகச் சந்தையில் அரிசி கிடைக்காத போதிலும் நமது நாட்டில் அரிசித் தட்டுப்பாடு ஏற்படாமலும் பசிபட்டினியால் மக்கள் உயிர்துறக்காமலும் நமக்குச் சீனுவிலிருந்து அரிசி கிடைத்துவருவதற்கும் உலகச் சந்தையில் ரப்பர் விலை வீழ்ச்சியடைந்தாலும் நமது ரப்பரை சீனு தொடர்ந்து வாங்குவதற்கும் சீனுவுடன் இலங்கை பண்டமாற்று ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதற்கு மூலகாரணமாக இருந்தவர் திரு ஆர் ஜி சேனநாயகா.

ஆட்சிமன்ற ஜனநாயகத்தில் நீண்ட கால அனுபவமுடையவர். இரண்டு தொகுதிகளில் ஒரே சமயத்தில் போட்டியிட்டு இரண்டு தொகுதிகளிலும் வெற்றியீட்டி ஒரு சாதனையை நிலைநாட்டியவர்.

நமது நாட்டின் தேச பிதாக்களில் ஒருவரான திரு. எப். ஆர். சேனநாயகாவின் மூத்த புதல்வராகப் பிறந்து தந்தைக்குப் பின்மைந்தன் என்ற நற்பெயரை ஒரு காலத்தில் சம்பாதித்துக் கொண்ட திரு ஆர் ஜி குறுகிய வகுப்புவாதக் கொள்கையினுல் அரசியல் ஆதாயம் பெறலாமென்ற தவருன வழியைப் பின்பற்றியதால், இந்தநாட்டின் சிறந்த தலைவர்களில் ஒருவர் என்ற கீர்த்தியுடன் சகல மக்களும் மதித்தும் போற்றும்நிலையை இழந்து ஒரு சாதாரண அரசியல் வாதியாக கடைசிக்காலத்தைக் கழிக்க நேர்ந்ததை யிட்டுயாரும் கவலைப்படுவர். திரு ஆர் ஜியின் வாழ்வும் மறைவும் நம் நாட்டு அரசியல் வாதிகளுக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

## உதவி மந்திரி உறுதி:

# சிறுபான்மை சமூகப் பிரதிநிதிக்கும் இடம்

## பனம் பொருள் கூட்டுத்தாபனத்தில்!

உடுப்பிட்டி, செவ், பனம் பொருள் கூட்டுத்தாபனத்தில் சிறுபான்மைச் சமூகப் பிரதிநிதி யொருவரும் அங்கத்தவராக இடம் பெறுவார் நான் கொழும்பு சென்றதும் முதல் முதலாகச் செய்யப்போகும் கடமை இதுவாகவேயிருக்கும் இவ் விடயமாகக் கௌரவ அமைச்சருக்கும் சிபார்சு செய்வேன்.

இவ்வாறு வடபகுதிக்கு விஜயம் செய்து பலகிராமங்களுக்குச் சென்று தாழ்த்தப்பட்டமக்களின் பிரச்சினைகளை நேரில் பார்வையிட்ட தோட்டக்கைத் தொழில் உதவியமைச்சர் திரு. அல்பேர்ட் காரியவாசம் உறுதியளித்துள்ளார்.

உதவியமைச்சர்வடபகுதி மக்களுக்கு விடுத்த செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

எமது அரசாங்கத்தில் சாதிசமய வேறுபாடுகள் கிடையாது, பழைய அரசாங்க மந்திரிகள் பணக்காரர்களின் விருந்தாளிகளாக விருந்தனர் ஆனுல் இன்றைய அமைச்சர்கள் ஏழைகளினுடைய விருந்தாளிகளாக விருக்கின்றனர். இதிலிருந்து இந்த அரசாங்கம் மக்களரசாங்கம் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

தமிழ் மக்களுடையபொருளாதார அபிவிருத்தியை முன்வைத்துத்தான் பனம் பொருள் கூட்டுத்தாபனம் நிறுவப்படுகிறது இந்நோக்குடன் பல ஆராய்ச்சிநிலையங்களை நிறுவுவதற்கான ஒரு அம்சமாக எனது வடபகுதி விஜயம் அமைந்து உள்ளது.

எனது இந்தவிஜயம் மிகவும் பிரயோசனமுள்ளதாக அமைந்துள்ளது. எம்மிடையே தமிழர்-சிங்களவர் என்ற பேதமில்லாது அனைவரும் ஒரேசமுதாயமாக வாழ்ந்தால் தான் இந்நாடுஒரு சோஷலிஷநாடாக உருவாக முடியும்.

அஸிஸின் தொழிலாளர் காங்கிரஸ், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் சமஷ்டிக்கட்சி ஆகியவற்றேடு சேர்ந்தும் ஐக்கிய முன்னணியமைத்தது ஆனுல் இந்த ஐக்கிய முன்னணிகளில் ஒன்ருவது அரசாங்கத்தை அமைப்பதற்கு ஏதுவான - ஏற்றுக்கொள்ளத்தக்க ஐக்கிய முன்னணியாக விளங்கவில்லை.

நல்லதொரு அரசாங்கத்தை அமைக்க தொழிலாளர் வகுப்பு கட்சிகளின் ஐக்கிய முன்னணியே சிறந்தது என்பது எமது கட்சியின் நீண்டகாலக்கருத்தாகும்.

### யுத்தத்திற்குப்பின்...

முன்னைய இக்கருத்தினை விளக்கினுல் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று அம்சங்களைக் காணலாம். ஸ்பானிய நாட்டின் 1936-ம் ஆண்டு அங்கு அமைக்கப்பட்ட மக்கள் முன்னணி அந்நாட்டின் புரட்சியை முறியடித்த முறையை சமசமாஜிஸ்டுகள் விரைவில் மறந்துவிடமாட்டார்கள். எவ்வாறிருப்பினும் யுத்தத்துக்குப் பின்னர் விசேஷமாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் நிலைமைகள் மாற்றமடைந்து வேறுபட்ட ஒரு சூழ்நிலை உருவானது.

முதலாவதாக யுத்தத்துக்கு முன்னர் நிலவிய ஏகாதிபத்தியத்திலும் பார்க்க யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட ஏகாதிபத்தியம் வலுகுறைந்ததாக விருந்தது யுத்தத்துக்கு முன்னர் உலகில் ருஷ்யா மாத்திரமே ஒரு சோஷலிச நாடாக விளங்கியது யுத்தத்திற்குப் பின்னர் ஐரோப்பாவில் பலசோஷலிச நாடுகள் உருவாகின, ஐரோப்பாவில் மட்டுமன்றி 1948-ம் ஆண்டுக்குப்பின்னர் கிழக்கில் சீனு மற்றுமொரு பெரிய சோஷலிச நாடாக உருவெடுத்தது. அதேவேளையில் ஆசிய, ஆபிரிக்க கண்டங்களில் காலனித்துவத்தை எதிர்த்து போராட்டங்கள் நடந்தன. இதனுல் இங்குள்ள பல நாடுகள் சுதந்திரமடைந்தன இதன் காரணமாக ஏகாதிபத்தியம் முன்னரிலும் பார்க்க வலுவிழக்கத்தொடங்கியது. இவ்வாறு ஏகாதிபத்தியம் வலுவிழக்க ஆசிய ஆபிரிக்கநாடுகளில் குறிப்பிடத்தக்க புதிய தொடு நிகழ்ச்சியைக்காணக் கூடியதாகவிருந்தது. அதாவது இந்நாடுகளின் மக்கள் அப்போதைய அரசியல் நிலைமைகளில் நல்ல தெளிவு அற்ற தலைவர்களின்கீழ்கூட பாராட்டத்தக்க வகையில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச்சென்றது மட்டுமன்றி முதலாளித்துவத்தையும் எதிர்த்துச் சோஷலிசப் பாதையில்செல்லத்தொடங்கினர்.

...ளைகளின் கீழ் ஒன்றிணைந்து அரசாங்கம் அமைத்தது சரியானதேயாகும். மார்க்ஸிச கோட்பாட்டின்படியும் இது சரியானதொன்றேயாகும்,

எவ்வாறிருப்பினும் நாம் ஐக்கியமுன்னணியின் கோட்பாட்டின ஒரு அம்சத்தை மறக்கக்கூடாது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் சோஷலிசத்தை நோக்கிய தனது பிரயாணத்தைத் தொடர்ந்து, முறையாகப் படிப்படியாக மேற்கொள்ள வேண்டும், முதலாளித்துவ சுரண்டல் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து அதனிடத்தில் சோஷலிச அமைப்பு முறை உருவாதல் வேண்டும். இவ்வாறு ஐக்கிய முன்னணி அரசு செய்யாவிட்டால் அதன் வளர்ச்சி இடையில் தடைப்படுத்தப்பட்டுவிடும். இந்தோனேசியா, கானு ஆகிய நாடுகளின் அரசாங்கங்களின் விதி ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கும் வரக்கூடாது.

### தாய்மொழி பற்றி முதலில் கூறியது ல. ச. ச. கட்சி

அரசாங்கத்தின் கடமைகள் யாவும் அன்னிய அதிகாரிகளின் ஆட்சியின்போது நடைபெற்ற மொழியில் அதாவது ஆங்கிலத்தில்நடைபெறக்கூடாது. மக்கள்பேசுகின்ற அவர்களது தாய் மொழியின் மூலமே நடைபெறவேண்டும் என்றதை முதன்முதலில் இலங்கையில் எடுத்துக் கூறியது லங்கா சமசமாஜக் கட்சியேயாகும். இதன்படி 1936-ம் ஆண்டிலிருந்து கீழ்க்கோடுகளில் வேலைகளும், பொலிஸ் நிலையங்களில் பதிவுகளும் தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலுமே நடைபெறவேண்டுமென சமசமாஜக் கட்சி கோரிவந்துள்ளது.

காலங்கடந்த பின்னர் மற்றைய அரசியல் கட்சிகள் நாம் நினைத்தவாறு தாமும் சிந்தித்து ஆங்கிலத்தின் இடத்தைச் சிங்களமும், தமிழும் எடுக்க வேண்டும் இவை இரண்டும் அரசகருமமொழிகளாக வேண்டும் என்ற கோட்பாட்டை ஏற்றுள்ளன. 1952-ம் ஆண்டு ஆட்சிமன்றத் தேர்தலின் போது இலங்கையின் அரசியல் கட்சிகள் யாவும் சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளையும் அரசகருமமொழிகளாக்குவதெனத் தீர்மானித்தன.

1955-ம் ஆண்டு இந்த நிலைமை மாற்றமடைந்தது. ஆட்சிமன்றத் தேர்தல் நெருங்கியதும் லங்கா சுதந்திரக்கட்சியும் திரு பிலிப் குணவர்த்தனுவின் புரட்சிவாத லங்கா சமசமாஜக் கட்சியும் பாஷ பெரமுன போன்ற நிறுவனங்களோடு சேர்ந்து மகாஜன எக்சத் பெரமுனவுடனும் கம்யூனிஸ்ட் கட்சியுடனும் சேர்ந்து ஐக்கிய இடதுமுன்னணியை உருவாக்கும் தருணத்தில் சமசமாஜக் கட்சி தனது மொழிக் கொள்கையை மாற்றியது.

இதுவரைகாலமும் சிங்கள மக்களின் சிங்களம் மட்டும் என்ற எண்ணம் தற்காலிக ஒரு நோக்கம் என சமசமாஜக் கட்சி தொடர்ந்து கருதிவந்தது. தேசிய ஒற்றுமையை இரு மொழிகளையும் அரசகருமமொழிகளாக்குவதன் மூலமே உருவாக்கலாம் என்று நம்பிக்கை கொண்டு நீண்ட காலமாக எங்கள் கட்சி, பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்களின் ஆதரவைப் பெருமளவில் இழந்தும் தனது மொழிக் கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்துவந்தது.

காலம் செல்லச்செல்ல, சிங்களம் மட்டுமே அரசகருமமொழியாக வேண்டுமென்ற கொள்கை நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள மக்கள் மனதில் மிக ஆழமாகப் பதிந்துவிட்டது. அத்துடன் தமிழ்மக்களின் தலைவர்களுக்கும் தமிழ் மொழியை முன்னேற்றுவது நோக்கமல்ல. ஆங்கில மொழியில் தங்கிநிற்பதே அவர்களது நோக்கமாகும்.

இந்த நிலைமையில் லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர்கள் தங்கள் மொழிக்கொள்கையை மாற்றுதுவிட்டார்களானுல் சோஷலிஸத்துக்காக உழைக்கும் பெரும்பான்மை மக்களிடமிருந்து தாம் பிரிந்து தனித்துநிற்க வேண்டிய ஒருநிலை ஏற்படுமென உணர்ந்தார்கள். எனவே தங்கள் மொழிக்கொள்கையை மாற்றினுர்கள். சிங்களம் மட்டுமே அரசகரும. மொழியாக வேண்டும். தமிழுக்கு நியாயமான இடம் அளிக்கப்படவேண்டுமென்பதே அவர்களுடைய தற்போதைய மொழிக் கொள்கையாகும்.

எந்த வகையில் பார்த்தாலும் லங்கா சமசமாஜக் கட்சி தனது மொழிக்கொள்கையை மாற்றியது சரியானதேயாகும். ஆனுல் விஞ்ஞான சோஷலிஸ அல்லது மார்க்ஸிஸக் கட்சியானதால் பிரச்சினைகளை மதிப்பிடுவதில் செயலளவில் நிற்கவியலாது. பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்வது அவசியமாகும்.

இப்படியானுல் சிங்கள மொழியின் அந்தஸ்தைத் தமிழ்மொழிக்கு வழங்காததால் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு அது ஒரு தடையாக இருக்கமாட்டாதா?

உலகின் மற்றைய நாடுகளைப் பற்றி அறிந்த அனுபவத்தைக்கொண்டு நோக்குமிடத்துப் பல சமூகத்தவர்கள் வாழும் ஒரு நாட்டில்

...ரீதியில் மாணவர் பிரச்னையை தீர்க்க ஆலோசனை கூறுவதே இச்சங்கத்தின் நோக்கமாக இருக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச்சந்தித்து பேட்டி காண்பதென்றும் ... ஸ்ரீகெங்காதரனும், தனுதிகாரியாக திரு எஸ் வி. முதலியும் தெரிவுசெய்யப்பட்டனர்.

9 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

(கு. வி. ம)

## கரவெட்டி கொலை வழக்கு

# பல தடவை 2-ம் எதிரியை குறுக்குவிசாரணைசெய்தேன்

## அட்வகேட் சாட்சியம்

வல்வெட்டித்துறை, செவ்வாய்

'நான் பலதடவைகளில் இரண்டாவது எதிரியைச் சந்தித்து இருக்கிறேன் அவரை சில சந்தர்ப்பங்களில் குறுக்கு விசாரணையும் செய்து இருக்கிறேன் என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அட்வக்கேட் முருகேசு ஆலாலசுந்தரம் என்பவர் பருத்தித்துறை தற்காலிக மாஜிஸ்திரேட் திரு ஆ. இராசரத்தினம் முன்னிலையில்நடைபெற்ற கரவெட்டி கொலைவழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினுர்.

இவ்வழக்கு கரவெட்டி மேற்கைச்சேர்ந்த கே. வன்னியசிங்கம், எஸ். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராகவன் அல்லது ஆனந்தன் என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக பருத்தித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்டது.

அட்வகேட் ஆலாலசுந்தரம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எனக்கு 2-வது எதிரியை நான்கு வருடங்களாகத் தெரியும் அவர் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் வேலைசெய்கிருர். நான் இலங்கை தொழிலாளர் சங்கக் காரியதரிசியாகஇருக்கிறேன். 2-வது எதிரியை பலதடவைகளில் சந்தித்திருக்கிறேன் சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர் சங்க விடயமாககுறுக்குவிசாரணையும் செய்தும் இருக்கிறேன் நான் இந்த முறை நடந்த ஆட்சி மன்ற தேர்தலில்கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிட்டேன். 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் கிளிநொச்சியில் வசித்துவருகின்றேன். அந்த நேரங்களில் அடிக்கடி 2வது எதிரியைச் சந்தித்திருக்கிறேன். கடந்த ஏப்ரல்மாதம் 3-ந்திகதி, அடுத்த நாள் நடைபெறவிருக்கும் எனது தேர்தல் கூட்டத்திற்கு பஸ்களை ஒழுங்கு செய்வதற்காக அவரைச் சந்தித்தேன். கூட்டம் 4ம் திகதி 10மணியளவில் ஆரம்பித்தது இந்தக் கூட்டம் என்னை ஆதரித்து நடைபெற்ற முதல்கூட்டம். இக் கூட்டம் குமரபுரத்திலிருந்து பிற்பகல் 4-30 மணியளவில் ஊர்வல அழைப்புடன் ஆரம்பித்து கிளிநொச்சிநெருட்டிக்கோமைதானத்தை வந்தடைந்தது அலங்கரிக்கப்பட்ட டிராக்டர் வண்டி ஒன்றில் வந்த ஊர்வல அழைப்பில் நானும் ஜெயக்கொடியும் கே. பி. இரத்தினம், நேமிநாதன் ஆகியோர் இருந்தோம். அந்த ஊர்வலம் சிற்றி பேக்கரியைக் கடந்து தான் செல்லவேண்டும்,

சிற்றி பேக்கரிக்குகிட்ட ஊர்வலம் 9-30மணியளவில் வந்திருக்கும் அந்த நேரத்தில் 2-வது எதிரியைக் கண்டேன். அவருக்கு கைகாட்டிய ஞாபகமிருக்கிறது. அதற்கு அவரும் கைகாட்டிய ஞாபகமிருக்கிறது 5ம்திகதி அவரை கிளிநொச்சிப் பொலிசார் கரவட்டிக் கொலைஒன்று சம்பந்தமாகத் தேடுதல் செய்து பொலிஸ் நிலையத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டு பொலிஸ் நிலையத்திற்குப் போனேன்: அங்கு 2-வது எதிரியைக் கண்டேன்: பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் இது பிழையான தகவலாக இருக்கலாமென்றும் திரும்ப ஒருக்கால் விசாரணைசெய்து பாருங்கள் எனவும் கேட்டேன்.'

மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

......

யாழ்ப்பாணம், புதன்

''பனைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவில் பனைத்தொழிலில் பாரம்பரியமாக கைதேர்ந்தவர்களாக இருக்கும்சிறுபான்மைத் தமிழர் ஒருவரையும் சேர்த்துக்கொள்ளும்படியும்பனைத்தொழில் ஆராய்ச்சிக்கு இது மிகவும் உதவுவதாக இருக்குமென்றும் சிறுபான்மைத்தமிழர் மகாசபை நிர்வாகக்காரியதரிசிதிரு. எஸ். செல்லையா தோட்டத் தொழில்துறை உதவிமந்திரி திரு. ஏ. கே. அல்பேட்காரிய வாசத்திடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

...நடந்துள்ளது.

இவ்விருவரின் காதலுக்குரிய கன்னி ஒருவரைத் தனது காதலனுகவும் மற்றவரைத் தனது ஆருயிர் நண்பனுகவும் ஏற்றுக்கொண்டதாகவும் இதைப்புரிந்து கொள்ளாத நண்பர்கள் தமக்குள் கத்தியால் வெட்டுப்பட்டுக்கொண்டனர் என்றும் தெரியவருகிறது.

படுகாயங்களுக்கு உள்ளான இரு நண்பர்களும் உடனடியாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

முகத்துவார பொலிசார் இதுசம்பந்தமாக மேல்விசாரணைசெய்துவருகின்றனர்.

(வி. நி)

### தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

தர்மபுரத்தைச் சேர்ந்த கருமன் சுப்பிரமணியம் என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார் கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு யோகலிங்கம் விசாரணை நடத்தினுர்.

மரணமானவரின் மனைவி கதிராய்(வயது 28) சாட்சியமளிக்கையில் முன்னர் ஒரு தடவையும் அவர் கழுத்தில் சுருக்கிட்டதாகத் தெரிவித்தார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### யாருடையது?

யாழ். திறந்தவெளி அரங்கின் பக்கத்தே தாராகிகுளம் வீதியில் கண்டெடுக்கப்பட்ட 3 திறப்புகள் 'ஈழநாடு' காரியாலயத்தில் உண்டு. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

0 0 0

யாழ். பொலிஸ் நிலையவளவில் கண்டெடுக்கப்பட்ட அறிமுக அடையாள அட்டையொன்று 'ஈநாடு' காரியாலயத்தில் ஒட்டைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

### மரண அறிவித்தல்

சின்னத்தங்கம்

சற்குரு கைம்பெண் சின்னத்தங்கம் காலமாகிவிட்டார். நுகேகொடை சென்ட் யோன் கல்லூரியிலும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், தற்போது அராலிவள்ளியம்மை ஞாபக வித்தியாசாலையிலும் ஆசிரியத் தொண்டாற்றிய சற்குருவிசுவநாதன் தாயாராகும். அன்னாரின் ஈமச்சடங்குகள் அராலி மேற்கு வேலங்காட்டு மைதானத்தில் (23-12-70) பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2596

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org